


A. KU[illegible]ARA[illegible]THASAN
[illegible] KALAIMAGAL ROAD
[illegible]ALAI WEST
[illegible]

# மனிதர்கள்

(கவிதைகள்)

முருகு
(சு. முருகையா)

வாகஜின் வெளியீடு

| | |
|---|---|
| மகுடம் | : மனிதர்கள் (கவிதைகள்) |
| நூலாசிரியர் | : முருகு (ச.முருகையா) |
| முதற் பதிப்பு | : ஐப்பசி 2002 |
| அச்சுப் பதிவு | : பிள்ளையார் அச்சகம்<br>676, பருத்தித்துறை வீதி,<br>நல்லூர். |
| பதிப்புரிமை | : நூலாசிரியருக்கே |
| அட்டை ஓவியம் | : திரு ஆசை இராசையா |
| வெளியீடு | : வாஹினி வெளியீட்டகம்<br>219, கஸ்தூரியார் வீதி<br>யாழ்ப்பாணம். |
| விலை | : ரூ 125/= |

| | |
|---|---|
| TITLE | : MANITHARKAL (POEMS) |
| AUTHOR | : MURUGU (S . MURUGAIAH) |
| FIRST EDITION | : OCTOBER 2002 |
| PRINTED BY | : PILLAIYAR PRESS<br>676, POINT PEDRO ROAD<br>NALLUR. |
| COPY RIGHT | : RESERVED BY AUTHOR |
| COVER DESIGN | : MR. ASAI RASIAH |
| PUBLISHED BY | : VAHINI PUBLICATIONS<br>219, KASTHURIYAR ROAD,<br>JAFFNA. |
| PRICE | : RS . 125 /= |

உ

சிவமயம்

# உங்களுடன்
# கணப்பொழுது .........................!

பக்திப்பாமாலை (29பாடல்); ஊருக்கல்ல .............. (07 சிறுகதை); ஐங்கரன் பாமாலை (48 பாடல்); நல்லைக் கந்தன் பாமாலை (56 பாடல்); நாமகள் பாமாலை (63 பாடல்) ஆகிய எனது படைப்புகளைத் தொடர்ந்து "மனிதர்கள்" என்னும் இக்கவிதைத் தொகுப்பினைத் தங்கள் அன்புக்கரங்களிற் சமர்ப்பிக்கின்றேன்.

சுமார் 30 வருடங்களாக கவிதை (மரபுக்கவிதை; புதுக்கவிதை; கீர்த்தனை); சிறுகதை முதலாம் துறைகளில் எழுதி வருகின்றேன். யான் எழுதிய கவிதைகள் அனைத்தையும் பிரசுரித்தல் என்பது இயலாத தொன்று. யாழ் கோட்டை முற்றுகை காரணமாக 1990ல் ஏற்பட்ட இடப்பெயர்வு; இந்திய அமைதிப்படையின் வரவால் - நகர்வால் - 1987ல் ஏற்பட்ட இடப்பெயர்வு; 1995-10-30ல் ஏற்பட்ட வலிகாம மக்களின் தென்மராட்சியை நோக்கிய மாபெரும் இடப்பெயர்வு ஆகியவை காரணமாக எனது பாதுகாப்பில் இருந்த கவிதைகளில் கணிசமான ஒருபகுதி என் கைநழுவிப் போய்விட்டமையும் எனது இயலாமைக்கு ஒரு காரணமாகும்.

எனவே, இது வரையில் பிரசுரமான கவிதைகளில் - என் கையில் எஞ்சியிருந்தவைகளில் - தெரிந்தெடுத்துத் தொகுத்தவையே "மனிதர்களாக" உலா வருகின்றன(ர்).

எனது முதற்கவிதை 1973ல் சுதந்திரன் இதழில் பிரசுரமானதெனினும் அக்கவிதை என் கைகளில் இல்லை என்பது வருத்தத்துக்குரியது.

அதன் பின்னர் எனது கவிதைகளை மனமுவந்து ஏற்றுப்பிரசுரித்துதவிய ஈழநாடு; ஈழமுரசு; உதயன்/சஞ்சிவி; வீரகேசரி; தினக்குரல்; தினகரன்; சிந்தாமணி; முரசொலி முதலான நாளேடுகளின் ஆசிரியப் பெருமக்களுக்கும்...............

தீபம் (தமிழகம்); சிரித்திரன்; சுடர்; சாளரம்; சக்தி; நங்கை: பூபாளம்; கோகிலம் முதலான சஞ்சிகைகளின் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும்.................

எனது இக்கவிதைத் தொகுப்பினைப் பார்வையிட்டு ஆலோசனைகளுடன் நல்லதொரு முன்னுரையினைத் தந்துதவிய மூத்த - புகழ்பூத்த - கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களுக்கும் -

"மனிதர்கள்" தொகுப்புக்கு நல்லதொரு அட்டைப்படத்தினை வரைத்து தந்துதவிய நாடறிந்த நல்லதொரு ஓவியர் திரு. ஆசை இராசையா அவர்களுக்கும் .....................

இத்தொகுப்பினை அழகுற அச்சிட்டுத் தந்துதவிய பிள்ளையார் அச்சக உரிமையாளர்; ஊழியர்கள் ஆகியோருக்கும்..................

இத்தொகுப்பினை மனமுவந்து ஏற்று வழமை போன்று பேரன்புடன் பேராதரவினை வழங்கும் வாசகர்ப்பெருமக்களாகிய உங்களுக்கும்..................

என் இதயம் நிறைந்த - கனிந்த - நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்

**45 சுவாமியார் வீதி,**
**கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்**
**6. 10. 2002.**

முருகு (ச. முருகையா)

உ

## சிவமயம்

## முன்னுரை

"முருகு' அவர்கள் நீண்டகாலமாகக் கவிதை எழுதி வருபவர். அவரது ஆக்கங்கள் வார, மாத சஞ்சிகைகளில் அவ்வப்போது வெளிவந்துள்ளன. நல்லூர் முருகன் உற்சவகாலத்தில் அவர் எழுதும் இசைப்பாக்கள் என்னைக் கவர்பவை. இசைவாணர்கள் அவற்றைக் கச்சேரிகளில் பாடக் கேட்டிருக்கிறேன்.

"மனிதர்கள்" என்ற இத்தொகுதியின் முதலிலும் முடிவிலும் தமிழ்வாழ்த்தாக இரு இசைப்பாக்கள் இருந்தாலும் இது ஒரு கவிதைத் தொகுதியே. கடந்தகால் நூற்றாண்டு காலமாக 'முருகு' எழுதிய கவிதைகளின் தொகுப்பு இது.

ஒரு கலைஞனுக்கு - கவிஞனுக்கு - இருக்க வேண்டிய அடிப்படைப் பண்பு அவதானம்; தன்னைச் சுற்றி நிகழ்பவற்றைக் கூர்ந்து நோக்கும் இயல்பு; தான் காண்பனவும் கேட்பனவும் உணர்வனவும் அவன் படைப்புக்கு ஆதாரம். சாதாரண மனிதன் காணத்தவறும் விடயங்கள் படைப்பாளியின் பார்வைக்கு- பரிசீலனைக்கு - உள்ளாகின்றன. அவன் அவற்றுக்கு கலைவடிவம் தருகின்றான்; வாழ்வு தருகின்றான்.

முருகுவின் கவிதைகள் எமது சமூகத்தின் கடந்த முப்பதாண்டு வரலாறாகிறது. பாணுக்குக் க்யூவில் நின்ற பஞ்சகாலம்; கிழக்கு மாகாணத்தை அழித்த கொடும்புயல்; மின்வெட்டுக் காலத்தில் விளக்கெரிக்கும் விந்தை முறைகள்; மற்றும் சீதனக்கொடுமை; குடும்ப உறவு; குழந்தை வளர்ப்பு; விலைவாசியேற்றம்; தேர்தல் நடைமுறை; கிரிக்கெற்பித்து; சினிமா மோகம்; மது; சூது; போக்குவரத்திற்படும் அல்லல்கள் முதலிய அம்சங்கள் கவிஞருடைய பார்வைக்கு - பரிசீலனைக்கு - உள்ளாகின்றன.

"ஒருவருக்குத் துயரமெனின் ஊர்உறவோர் அருகில்வந்து
கனிவுடனே ஆறுதல்சொல் வார்கள் - நெஞ்சுத்
துணிவுடனே வாழவும் செய்வார்கள் - இங்கு
ஒருவருக்கா துயரம்? ஐயோ ஊர்உறவோர் கலங்குகிறார்
இனிய வார்த்தை யார்சொல்லுவார்கள்? - புயலில்
இழந்த வாழ்வை யார் நல்குவார்கள்?"

-இது 1978இல் வீசிய புயல்பற்றியது.

குளத்தை அண்டியே வாழ்ந்த கொக்கு, குளத்து நீர் வற்றியதும் உறவை முறித்துக் கொண்டு புறப்படுகிறது. சிறுவன் கேட்கிறான் "உறவு, உறவு என்று குளத்தைக் கொண்டாடிய நீ, இப்படிப் போகலாமா?"

"தண்ணீர் இல்லாக் குளத்துடன் இருந்து என்ன பயன்?"

- கொக்கு!

"உன்னைப் போல் எண்ணும் மனிதர் எம்மிடையேயும் இருக்கிறார்கள்! பணம் இருக்கும் வரையில் உறவு சொல்லி வாழுவார்! பணம் குறையக் கண்டு கொண்டால் உறவை மறந்து ஓடுவார்!" - பையன்

ஓர் உரையாடல் மூலம் நன்றிமறவாமை உணர்த்தப்படுகிறது.

வாசலில் ஒரு குரல். "பிள்ளை, யாரென்று ஒருக்கால் பார்!" ........இது தகப்பனார்.

"அப்பா, தேங்காய் பிடுங்குற சின்னப்பொடி வந்து நிக்குது!" ........இது மகள்.

அதாவது உயர்திணை அ∴றிணையாகிறது!

அடுத்த காட்சி. வெளியே போயிருந்த மகள் திரும்பி வருகிறாள். "சீஸர்;" என்ரை டாலிங்! கனநேரமா உன்னைக் காணேல்லையடா! எங்கை இருக்கிறாய்?". படுக்கையறையில் - படுக்கையிலிருந்து இறங்கி ஓடிவருகிறது "உயர்" சாதி நாய்!

அதாவது அ∴றிணை உயர் திணையாகிறது. இந்தத் திணைமயக்கத்தை அழகுறச் சித்திரிக்கிறார் "முருகு".

இத்தொகுதியிலுள்ள மிகச் சிறப்பான படைப்புக்கள் குறுங்கவிதைகள் என்றே கருதுகிறேன். புதுக் கவிதைக்குரிய வீச்சுடன் அவை தனித்து நிற்கின்றன.

"கர்ப்பக் கிருகத்தில்
தெய்வம் இருக்கும்!
ஆனால் ~ எனது
தெய்வத்தினுள்ளேயே
கர்ப்பக்கிருகம்! .....தாய்-

"என் நிறம் சிவப்பு!
உண்மைதான் ~ ஆயினும்
என்னுள்ளும் பிரிவுகள்
இருப்பதும் உண்மைதான்" .......இரத்தம்-

"சக்தி உள்ளவரை
புலன்வழி ஓட்டம்!
சக்தி அற்றுவிடின்
அரனடி நாட்டம்!" ......சக்தி-

"தணிக்கை செய்திடாப்
பல்சுவைச் சித்திரம்!
தான் மட்டும் பார்த்திடும்
பல்வகைச் சித்திரம்!" ......கனவு-

ஆகியவற்றை உதாரணங்காட்டலாம்.

தமிழிலக்கியப் பயிற்சி, சமயச்சூழல், அதன் பேறான ஒழுக்கம் - இவை கவிஞர் முருகுவின் பின்புலம். இப்பண்புகள் கவிஞரை அறியாமலேயே. அவர் படைப்புக்களில் முனைப்பாக முன்னிற்பதனைக் காணலாம். செழுமையான சொல்லாட்சி, வழுவில்லாத மொழிநடை, எளிமை, நகைச்சுவை என்பன இவர் கவிதையின் பண்புகள்.

எல்லோரும் படித்தின்புறக் கூடியது "மனிதர்கள்"
வாழ்த்துகிறேன் கவிஞரை!!

**"ஏரகம்"**
**பொற்பதி வீதி**
**கொக்குவில்**
**2002 . 10 . 28** **சோ. பத்மநாதன்.**



# தமிழ் அன்னையின் பதமலரைத் தினம் சூடு



**ராகம்:- தேஷ்** **தாளம்:- ஆதி**

**பல்லவி**

அன்னையின் அரும்புகழைத் தினம்பாடு - தமிழ்
அன்னையின் பதமலரைத் தினம் சூடு - எங்கள்.
....... (அன்.....)

**அனுபல்லவி**

முக்கண்ணன் அகத்தியர்க்கு அருளிடவே - வேல்
முருகனின் அருள்மடியிற் தவழ்ந்தவளாம் - உயிர்
........(அன்.......)

**சரணங்கள்**

முச்சங்கத் தரியணையில் வீற்றிருந்தாள் - தமிழ்
முடியுடை மூவேந்தர் பணிந்துநின்றார் - கோடி
அறிஞர்கள் அணிசூட்டி மகிழ்ந்துநின்றார் - முழு
அகிலமும் அவளழகில் மயங்கிநின்றார் - அந்த
......(அன்.......)

*

கையிலையிற் பிறந்தவள்தான் எமதன்னை - தென்
பொதிகையில் வளர்ந்தவள்தான் தமிழன்னை - ஓடும்
வைகையில் எதிர்நின்றாள் எங்களன்னை - கொடும்
நெருப்பிலும் எதிர்நின்றாள் எங்களன்னை - அந்த
.....(அன்.......)

*

அன்னையின் மணிவயிற்றில் மலையாளம் - மற்றும்
கன்னடம் துளுதெலுங்கும் உதித்தனவாம் - இன்னும்
பன்மொழிக்கு மன்னையாய் விளங்குகின்றாள் - அவள்
கன்னியாய் என்றென்றும் துலங்குகின்றாள் - அந்த
.....(அன்.........)

கரங்களில் வளையல்கள் தரித்திருப்பாள் - இரு
காதிலும் குண்டலங்க ளணிந்திருப்பாள் - நூல்
இடையினில் மேகலை இணைத்திருப்பாள் - பொற்
பதங்களில் சிலம்புகள் பூண்டிருப்பாள் - அந்த
.......(அன்.........)

*

உயர்கலை பலகோடி கொண்டஅன்னை - மண்ணில்
உயர்நீதி நெறிமுறைகள் புகன்ற அன்னை - யாரும்
புகலரும் தமிழ் வீரம் கொண்ட அன்னை - என்றும்
புகலரும் மெஞ்ஞானம் பகர்ந்த அன்னை - அந்த
........(அன்.......)

*

அன்னையின் எழில்கண்டு வேற்றவரும் - இன்றும்
அன்னையின் பணிசெய்ய முந்துகின்றார் - எங்கள்
அன்னையின் அழகுக்கோர் இணையுமில்லை - தமிழ்
அன்னையின் அழகுரைக்க மொழியுமில்லை - அந்த
.......(அன்........)

*

அன்னையின் ஒரு விழியே இயற்கலையாம் - எங்கள்
அன்னையின் நுதல்விழியே இசைக்கலையாம் - உயிர்
அன்னையின் மறுவிழியே நாடகமாம் - எங்கும்
அன்னையின் அழகொளிரும் நர்த்தனமாம் - அந்த
........(அன்.......)

*

புவியெங்கும் தமிழோசை ஒலித்திடவே - இந்தப்
புவியெங்கும் தமிழ்க்கலைகள் செழித்திடவே - என்றும்
உலகெங்கும் தழிழாட்சி நிலைத்திடவே - எங்கள்
உயிர்தந்தும் தமிழ்த்தொண்டு இயற்றிடவே - அந்த
........(அன்........)

* * *

ஈழநாடு 11.06.91

# பாரதி புகழ் பரப்பிடுவோம்!



பாரதி என்னும்
பாவலன் தோன்றிப்
பாரதம் வாழப்
பா யாத்தான்.

சிந்து நதிமிசை - ஒளி
சிந்தும் நிலவினில்
பாடி மகிழ்ந்திடப்
பா யாத்தான்.

பாரத மக்களைப்
பாழும் அடிமையில்
வீழ்த்திய வெள்ளையன் - நாடு
விட்டோடிடப்
பழகு தமிழினில்
பா யாத்தான்.

சுதந்திரம் இழந்தவர்
வாழ்வினை இழந்தவர்
விடுதலை பெற்றிட
வாழ்வைச் சுவைத்திட
பைந்தமிழ் மொழியினில்
பா யாத்தான்.

சாதிகள் பேசி
சதிகள் புரிந்திடும்
பாவம் அழிந்திட
பாவிகள் திருந்திட
பா வல்லோன் - நற்
பா யாத்தான்.

காகிதம் செய்திட
ஆயுதம் செய்திட
முத்துக் குளித்திட
கப்பல் ஓட்டிட
கன்னற் தமிழினில்
கனவு கண்டே
பாவலன் பாரதி
பா யாத்தான்.

பாலர்கள் கூடியே
பாடி மகிழ்ந்திட
பாப்பாப் பாட்டுகள்
பல யாத்தான்.

ஒன்றினை எய்திப்பின்
ஓராயிரம் இழந்திடும்
சூதின் விளைவைச்
சுவைபட விரித்திட
பாஞ்சாலி சபதப்
பா யாத்தான்.



கண்ணனைக் குருவாய்
சீடனாய்த் தோழனாய்
தாயாய்க் குழந்தையாய்
தந்தையாயரசனாய்
விளையாட வாவென்னும்
விளையாட்டுப் பிள்ளையாய்
கனிதரும் காந்தனாய்
காதற் கண்ணனாய்
கண்ட பாரதி
கவி யாத்தான்

கண்ணம்மா மீது
கனிந்த நற் காதலைக்
காதற் தமிழிலினில்
கவி யாத்தான்.

பாரதி காட்டிய
பாதையில் நடந்து
பைந்தமிழ் மொழியாம்
எந்தமிழ் மொழியை
ஏற்றிடுவோம் - நிதம்
போற்றிடுவோம்.

தேமதுரத் தமிழோசையினைத்
தேசமெங்கும் பரப்புதலால்
பாரதியின் புகழினை நாம்
பாரெங்கும் பரப்பிடுவோம்.



**சுதந்திரன் 16.09.73**

# இது ஒரு அறிமுகம்



அரிசியும் மாவும் அத்துடன்
காலராவும் இப்போது புதுக்
கவிஞர்களையும் உருவாக்குகிறது.
இதோ ச.முருகையா என்னும் கவிஞர்
"வாந்தி பேதியை வகுத்தாதே
எமை மீண்டும்"
என்று தலைப்பில் எழுதியுள்ள
கவிதையை நீங்களும் ரசிப்பதற்கு
இங்கு தருகிறேன்.

*

"ஆட்டாமா, றவைக்கும்
அரிசிக்கும் கியூ வரிசை
பாப்பாவுக் கூட்டும்
பால் மாவுக்கும் கியூ வரிசை
பஸ்ஸுக்கும் பாணுக்கும்
படமாளிகைக்கும் கியூ வரிசை
மருந்துக்கும் மரக்கறிக்கும்
மல்லிக்கும் கியூ வரிசை
பருப்புக்கும் பயறுக்கும்
படித்த பின் வேலைக்கும்
எதற்கெடுத்தாலுமின்று
எங்கணும் கியூ வரிசை.



*



இக்கியூ வரிசையெல்லாம்
இன்றில்லை இங்கு!
ஏனெனில் .................
அழையா அதிதியாயிங்கு
நுழைந்த வாந்திபேதியால்
பாதித்தவர்களைக் கண்டு
பீதி கொண்டு மக்களின்று
ஊசி மருந்தேற்றித் தம்
உயிரினைக் காக்கவென
ஆஸ்பத்திகளைச் சுற்றி
அனுமானின் வால்போல
நீண்டு வளர்ந்த வரிசையில்
நிற்கின்றார் பலநாளாய்

*

வாந்திபேதியே நீ
வந்தவழியேகிடுவாய்
வருந்துகின்ற தமிழரெமை
வருத்தாதே நீ மீண்டும்.

*

சுத்தமாயிருப்போம்
சுட்டாறிய நீர் குடிப்போம்
தடுப்பூசி ஏற்றுவித்து
தடுத்திடுவோம் நோயதனை
வாழ்வாங்கு வாழ்ந்து
வையகத்தை வாழவைப்போம்

*

எப்படிக் கவிதை? உள்ளத்து
உணர்ச்சியை உணர்த்துபவையெல்லாம்
கவிதைகளேயல்லவா!

* * * **ஊர்சுற்றி**

**ஈழநாடு 30.10.73**


# கண் திறந்து பார் பாணே!

பாணே! எம் பரம்பொருளே!!
பாரோர்பசி போக்கும் பெம்மானே!
ஓடிவந்தெம் பசிதீர்த்திடவே
ஒரு றாத்தல் வரம் அருள்வாய்!
முன்னாளிலெம்மை நிதம் நீ
முன்வந்தெதிர் கொள்வாய்!
ஏறெடுத்தும் பார்த்திலேம் - நாம்
ஏனென்றும் கேட்டறியோம்!
அறியாமையால் அந்நாளில்
அலட்சியமாய் நாமிருந்தோம்!
இந்நாளில் எம்மையெல்லாம்
இப்படியேன் வதைக்கின்றாய்?
கருணைதான் உனக்கில்லையோ?
கண் திறந்து பார் பாணே!



*

கொட்டும் மழையெனினும்
கொடும் பனிதான் வதைத்திடினும்
வெய்யோனின் கொடும் கதிரால்
வெந்துலர்ந்து போனாலும்; உன்
அருளமுதைப் பெற்று இவ்
அவனியி லுயிர் காத்திடவே
சிறுவருடன் சிறுமியரும்
காளையரும் கன்னியரும்
பொல்லூன்றும் முதியவரும்
தள்ளாடும் கிழவியரும்
ஏற்றத் தாழ்வெதுவுமின்றி
ஏக்கமுறும் மனத்துடனே
பேருவகையுடன் நீயுறையும்



"பேக்கறிக்" கோயில்கள் முன்
காலைமாலை இருபோதும்
காத்துக் கடும்தவம் புரிவார்.

*

புழு பூச்சி வண்டினமும்
பல்லிகளும் எலியினமும்
பரமாத்மா பாணே உன்
பதமலரில் வந்தணையும்!
பேரின்பம் அவைக்கருளும்
பேரொளியே நீயோவெனில்
அடியவர்க்கடியவனாய் ; மெய்
அடியவராம் எழிலடக்கம்!!

***

(இக்கவிதை பிரசுரமான 1973ல் பாணுக்கு மாபெரும் க / தட்டுப்பாடு நிலவியது)

ஈழநாடு 09. 12. 73



# சட்டத்தால் ஒழிக்க வேண்டும்..........

மனத்தினை மயக்கியே - நல்
மதியினைக் கெடுத்துப் பஞ்ச
மாபவம் புரியச் செய்யும்
மதுவினை விலக்குவீரே!

*

மதுவுண்ணும் மாந்தருக்கு
செல்வம் சீர்சிறப்பழியும்!
மானமுடன் கல்வியும் போம்!
நல்வாழ்வும் நலிந்தழியும்!

*



மண்ணுலகில் நல் வாழ்வை
நாடா தொழித்துத் தினம்
மதுப் பழக்கத்தா லழியும்
மக்களோ பலகோடி!

*

மதுவின்தீ விளைவுணர்ந்து
மதுவிலக்குக் காயுழைக்கும்
காசினி வாழ் மக்களெல்லாம்
கண்கண்ட கடவுளரே!

*

மது விளைக்கும் தீமைகளை
மக்களுக் குணர்த்தி; நாட்டு
மன்றத்தில் சட்டம் செய்து
மதுவினை ஒழித்தல் வேண்டும்!

*

மக்களை மாக்களாக்கும்
மதுவினை மனத்தினாலும்
உண்ணுதற் கெண்ணிடாது - இந்த
மண்மிசை நீடு வாழ்வீர்!

**ஈழநாடு 17.11.74**

# பூரண மதுவிலக்கு

மனத்தெழும் கவலை போக்க
மருந்தென மதுவைக் கொண்டால்
மது தரும் நோயைம் போக்க
மருந்தென எதனைக் கொள்வீர்?

அரசிறை பெருக்க எண்ணி
மதுவினை ஊக்கல் நன்றோ?
ஒளிதரு கண்ணை விற்று
ஓவியம் கொள்வாருண்டோ?

பூரணை நாளில் மட்டும்
மதுவினை ஒழித்தல் போதா!
பூரண மதுவிலக்கு
செயற்படுத்திடவே வேண்டும்.

**ஈழநாடு 09.02.75**



# மதுவென்னும் பூதம்...........



போத்தலிற் சிறையுண்டு இருக்குது பூதம்!
வயிற்றுட் புகுந்து விளைத்திடும் சேதம்!!
உழைப்பைப் பறித்து அழிக்குது நித்தம்!
உடலை அரித்து முடிக்குது முற்றும்!!

சொத்துச் சுகத்தை அழிக்குமப் பூதம்!
குடும்பத்தைக் குலைத்து விளைக்குது மோசம்!!
சுற்றம் சூழலை எதிர் நின்று மோதும்!!
நல்லறிவோர் கண்டு ஓடுவர் காதம்!!

குடிப்பதால் உடலுக்கு நலமென்னும் வாதம்
குடித்து அழிபவர் கூறிடும் வேதம்!
குடிப்பதால் உடலுக்குக் கேடொன்றே மிச்சம்!!
'குடிகாரன்' என்ற பெயரொன்றும் எச்சம்!!

கேட்டினில் இமயத்தை வென்றிடும் பூதம்!
கேட்டினைக் கேட்டால் கலங்குதே சித்தம்!!
பாட்டில் மறைந்து நிற்கின்ற பூதம்; இந்
நாட்டில் நடமிடும் 'மது' வென்னும் பூதம்!!

பூதலம் பூதத்தால் அழிந்திடும் உணர்வீர்!
பூதத்தை அழித்திட நாட்டினர் வருவீர்!!
சேதத்தை எண்ணி உழைத்திட வாரீர்!
பூதத்தை ஒழித்துப் பின் மகிழ்வுடன் வாழ்வீர்!

**ஈழநாடு 01.02.76**



# நிலவே நீ சொல்லு”

நிலவே நிலவே நீ நில்லு - உந்தன்
நெஞ்சில் உள்ளதை நீ சொல்லு

✻

எட்டா வானில் நின்றாயே - எமக்கு
கிட்டா யென்றே நினைத்தோமே!
விட்டா ராவுனை நம் மனிதர் - அங்கு
சிட்டாய்ப் பறந்து வந்தனரே!

✻


மண்ணிலிருந்து சிலமனிதர் - நெடு
விண்ணைக் கடந்து உன் வீட்டை
கண்டிட விரைந்து வந்தார்கள் - உனை
கண்டு குலவி நின்றார்கள்.

✻

வந்தவர் என்ன தந்தார்கள்? - வந்து
தந்தவர் என்ன சொன்னார்கள்?
தந்தனையோநீ பெருவிருந்து? - அதை
சிந்தனை செய்தே நீ சொல்லு!

✻

ஞானம் விண்ணைக் கடந்ததென்றும் - இந்த
வானும் நிலவும் அடிமையென்றும்
கானம் இசைத்து மகிழுகின்றார் - அவர்
கானம் உனக்கும் கேட்கிறதோ?



**ஈழநாடு 13.03.77**

# மதிப்பு



மூடி உள்ளதொரு
தகர டப்பாவை
உண்டியல் என்கிறார்!
அதைக் குலுக்கி யாரும்
பணம் கேட்டால்
தொண்டாம் ; அவர்
தொண்டனாம் ஆனால்
மூடி யற்றதொரு
தகர டப்பாவை
குலுக்கி யாரேனும்
பணம் கேட்டால்
பிச்சையாம் ; அவன்
பிச்சைக்காரனாம்!!

**சிரித்திரன் ஆகஸ்ட் 77**

# ஏன்?



கச்சேரியின் ஆரம்பம் முதல்
இறுதி வரையிலும் பக்கத்திலிருந்து
பக்கபலமாகத் தாளம் போட்டுத்
தவில் வித்துவானைத் தடம் புரளாது
வழி நடாத்திய ஏணியான-
"தாளக்காரரை" மனதார மறந்து
தவில் வித்துவானுக்கு மாலை சூட்டிப்
பாராட்டுகின்றார்கள்:



**சிரித்திரன் டிசம்பர் 77**



# தியாகத்தின் திருவுருவே

(சிந்தாமணி 27.11.77 இதழில் வெளியான "எருமை எழுப்பும் வினா" என்ற கவிதைக்குப் பதில் அளிக்கும் கவிதை இது)

அறுவைத் தொழுவத்தில்
அசைபோட்டு நிற்கின்ற
எருமையே! உன்குறையை
உருக்கமுடன் உணருகின்றோம்!

பசும்புல் மேய்ந்தெமக்குப்
பசும்பால் தந்ததனை - நாம்
மறப்போமோ நன்றிகொன்று?
மறுப்பதும் பண்பாமோ?

வையகத்தை வாழவைக்க
வயல்உழுது பயிர்வளர்த்தாய்!
சூடடித்து நெற்குவித்தாய்!
மாடாய் நீ உழைத்தாய்!

மறப்போமோ என்றென்றும்?
மறப்பதும் அழகாமோ? - ஆனாலும்
நன்மை செய்தாய் - சொல்லாதே!
நன்மைப் பயன்கெட்டு விடும்!!

எருமையென்று வசைசொன்னால்
எருமையே! உன்மனம்நோகும் - ஆதலினால்
"ஏழு ஐந்து மை" என்றே
ஏசுகின்றோம் செந்தமிழில்!
தூற்றுவோர் தூற்றட்டும் - உன்னை
போற்றுவோர் போற்றட்டும்!!
"எனக்கு மக்கள் என்ன செய்தார்"

*

எனக்கணக்குப் பார்க்காதே!
"என்கடன் பணிசெய்வ"தென்று
உன்பணி செய்மகிழ்வுடனே!!

*

உனதுழைப்பைப் பெற்ற பின்னும்
உளம் நிறையா மக்களுக்கு
உன்பணிக்கே சிகரமென
உன்னுடலைத் தருவதற்கு

*

அறுவைத் தொழுவத்தில்
அசைபோட்டு நிற்கின்ற
தியாகத்தின் திருவுருவே!
யாகத்தின் அவிப்பொருளே!

*

உன்தசையை உண்பதனால்
என்னவரின் குணம்திரிந்தே
உன்போன்றோர்க் கிந்தநிலை!!
என்செய்வேன் அவர்களைநான்?

*

மன்னித்தல் தெய்வ குணம்!
மன்னிப்பாய் மனுக்குலத்தை!!

**குறிப்பு எ -7**
**ரு - 5**
**மை**

**சிந்தாமணி 04.12.77**

## அறிவுரை



திரைகட லோடியும்
திரவியம் தேடென
ஆன்றோர் அருளிய
அறிவுரைப் படிநான்
திரவியம் தேடினேன்!

தேடிய போது
எனக்குக் கிடைத்ததோ
"கள்ளக்கடத்தல்காரன்"
என்றதோர் பெயரும்
சிறைத் தண்டனையுமே!!

**தீபம் யூன் 78**

## காலம் மாறியபோது!



மழலை பேசியே மலர்க்கரம் நீட்டி
அடித்தனன் மதலை -
அப்பாவின் கன்னத்தில்!
ஆனந்தம் பெருகிட
மகனை அணைத்து
அகமிக மகிழ்ந்தார் -
அவனது தந்தை!
இருபது ஆண்டுகள்
உருண்டதன் பின்னே
அந்த மகனே
அடித்திடக் கையை ஓங்கியபோது
"அடசீ மகனா! அற்பப் புழுவே!
என வைதிட்டார் - ஆத்திரம் மீறி
அடிக்கவும் செய்தார்!

**ஈழநாடு 14.12.78**

# புயலல்ல! உயிர் உண்ணும் கூற்று!!

மெல்ல மெல்ல வந்து எமைத் தழுவிச்சுகம் நல்கும் தென்றல்
புயலெனவே மாறியது அன்று - கொடும்
துயர் தரவே சீறியது நின்று - என்றும்
சொல்லச் சொல்ல முடிவுஇன்றிச் சேதம்பல செய்தபின்னர்
கயவனெனப் போனதுவேகாற்று - இஃது
புயலல்ல! உயிர் உண்ணும் கூற்று!

⁂

மாடிமனை வீடுகடை கோயில் 'சேர்ச்சு'ப் பள்ளியெல்லாம்
பாழான புயல் அடித்து நாசம் - அந்த
நாளிற் பல உயிர்களுக்கும் சேதம் - அள்ளிக்
கோடிபணம் கொடுத்த போதும் கொள்ளுதற்கு இயலாத
பாடசாலைக் கட்டிடங்கள் நாசம் - சினிமா
ஆடல்பாடல் அரங்குகள் நாசம்!

⁂

நாடிவளர் தென்னைகளும் நெல்லு விளை வயல்களெல்லாம்
குறைவின்றி அழிந்தனவிப்புயலால் - குருதி
உறைகிறது புயலினிந்தச்செயலால் - நிதமும்
ஓடிஓடி உழைத்து எங்கள் கிழக்குத்தமிழ் ஈழநாட்டில்
நிறைத்துவைத்த செல்வமெலாம் போச்சு - இந்த
நிறைவுடன் தான் சென்றதந்தக் காற்று!

⁂

ஒருவருக்குத் துயரமெனின் ஊர்உறவோர் அருகில்வந்து
கனிவுடனே ஆறுதல்சொல்வார்கள் - நெஞ்சுத்
துணிவுடனே வாழவும் செய்வார்கள் - இங்கு
ஒருவருக்கா துயரம் ஐயோ? ஊர்உறவோர் கலங்கிறார்கள்!
இனியவார்த்தை யார்சொல்லுவார்கள்?.புயலில்
இழந்தவாழ்வை யார்நல்குவார்கள்??

⁂

(1978ல் கிழக்கு மாகாணத்தைக் "மாயான பூமி" யாக்கிய புயல் பற்றியது)

**சுடர் பங்குனி 79**



# எது மெய்

உண்மைக்கு மறுசொல்
மெய் என்பர்!
பொய் எனும் உடலையும்
மெய் என்பர்!!
பொய் எது? மெய் எது?
ஐயோ அறியேன்!

**தீபம் ஆகஸ்ட் 78**

# அவளின் இனமே பூவினந்தான்.............



பூவையொருவள் பார்த்து நின்றாள்
பூவை மிக்க ஏக்கமுடன்!
பூவையே ஏனோ ஏக்கமென்றேன்!
பூவைப் பறித்துத் தாவென்றாள்!
பூவை விரைந்து பறித்தெடுத்தே
பூவையின் கையில் தரும்வேளை
பூவை மீண்டும் எனைப்பார்த்தாள்!
பூவிழி இரண்டிலு மோரேக்கம்!!

பூவைத் தந்தால் போதாது
பூவை எனது குழலிலென்றாள்!
பூவைத்தேன் அவள் கருங்குழலில்!
பூவை சாய்ந்தாள் என் மார்பில்!
பூவைக் கையில் எடுப்பதுபோல்
பூவையவளை அணைத்தெடுத்து
பூவை யொக்குமோர் மஞ்சத்தில்
பூரிப்புடனே நான் வைத்தேன்!!



பூவையின் முகமோ செங்கமலம்!
அவளின் இருவிழி கருங்குவளை!!
பூவையின் கன்னத்திற் பூஞ்செழுமை!
தேனிதழ் இரண்டும் பூவிதழ்கள்!!
பூவையின் விரல்கள் மென்காந்தள்!
மேனியின் மென்மையிற் பூதோற்கும்!!
பூவையின் கருங்குழல் பூமணமே!
அவளின் இனமே பூவினந்தான்!!

பூவையோ மலர் மஞ்சத்தில்!
பூவை இனியென் தஞ்சத்தில்!!
பூவைப் போல்வாள் என்றென்றும்
பூத்திருப்பாள் என் நெஞ்சத்தில்!
பூவை யொத்த பொறுமையுள்ள
பூவையைப் பெற்றதென் பேறன்றோ!
பூ..... வை இதுவா கவிதையென
சீறுகிறீர் ஏன்? நானறிவேன்!!

**சுடர்-புரட்டாதி 79**

# விந்தையோ?

பாட மறுத்தஎன்
வானொலிப் பெட்டியைத்
திறந்து பார்த்தேன்!
மூன்று மாதத்தின்முன்
வாங்கிப் பொருத்திய
பற்றறி நாலும்




உருகிக் கசிந்தும்
ஏதோ முளைத்தும்
இருந்தன பெட்டியுள்!
காரணம் என்னென்று
சிறிது நேரம்நான்
சிந்தனை செய்தேன்!
ஓ.................................
மூன்று மாதமும்
இடையீடு இல்லாது
இசைகேட்டதனால்
பொருத்தும் போது
கல்லாய் இருந்த
பற்ரறி நாலும்
உருகியுள்ளன!
இசையைக் கேட்டுப்
பற்ரறியே உருகினால்.......
மனித நெஞ்சம்
உருகுதல் விந்தையோ?.

**சுடர் ஐப்பசி 79** ..............................

# ஓட்டை வந்தால்.....?

கூரையில் ஓட்டை வந்தால்
வீட்டினுள் மழைநீர் சேரும்!
கூட்டினில் ஓட்டை வந்தால்
குருவிதான் பறந்து போகும்!

கூடையில் ஓட்டை வந்தால்
பண்டங்கள் வீழ்ந்து போகும்!
ஓடத்தில் ஓட்டை வந்தால்
ஓடமே ஆழ்ந்து போகும்!!





சொல்லினில் ஓட்டை வந்தால்
வாக்கெல்லாம் மாறிப்போகும்!
உள்ளத்தில் ஓட்டை வந்தால்
வாழ்க்கையே சாய்ந்து போகும்!!

குடத்தினில் ஓட்டை வந்தால்
குடத்துநீர் வழிந்து போகும்!
உடம்பினில் ஓன்பதோட்டை!
உடம்புதான் என்னவாகும்?.

**ஈழநாடு 28.10.79**

(இக் கவிதையின் ஆங்கிலமொழி பெயர்ப்பு, 1981 யூலை 6 - 10 வரை சான் - பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற 05 வது உலகக் கவிஞர்களின் மாநாட்டில் தமிழ் நாட்டைச் சேர்ந்த பெருங்கவிக்கோ டாக்டர் வா.மு. சேதுராமன் அவர்களால் தொகுத்து வெளியிடப்பெற்ற Tamil Poets today என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது)

# CLEAVAGE

**"A tattered ceiling floods the floor
A torn nest drives out the bird
A broken casket contents discard
A hole in boat brings death very near
A break in word disasters fill
A crack in heart to one death spells
A fall of pot its water spills
But nine - holed - body what hell will spell?"**

**A renowned poet in Ceylon.** **S.Murugaiya**

# பறந்து வர வேண்டும்!

சிட்டுக் குருவியொன்று பட்டுச் சிறகடித்துப்
பறப்பதைப் பார்க்கின்றேன். - மனம்
களிப்பதைப் பார்க்கின்றேன். - தினம்
பட்டுச் சிறகடித்துச் சிட்டைப் போலுயரப்
பறக்கவே எண்ணுகின்றேன். - துயர்
மறக்கவே உந்துகின்றேன்.!!

சின்னஞ் சிறிய உருக் கொண்டுள்ள பூஞ்சிட்டு
பறந்து செல்கின்றதே - வானில்
விரைந்து செல்கின்றதே - ஏனோ
பென்னம் பெரியஉருக் கொண்டுள்ள என்னாலே
பறக்க முடியவில்லை - அதை
நினைக்க இயலவில்லை!

கிடைப்பதை உட்கொண்டு சிறுகூட்டில் வாழ்கின்ற
கிட்டுப் பறக்கின்றது - காற்றை
வெட்டிப் பறக்கின்றது - கையில்
கிடைப்பதைப் பதுக்கிப் பெருக்கிடும் என்னாலே
பறக்கவும் முடியவில்லை - வானைக்
கடக்கவும் இயலவில்லை!

ஆசையும் கோபமும் அடுத்தவர்க் கின்னலும்
எண்ணாத சிட்டைப்போல - ஏதும்
பண்ணாத கிட்டைப்போல - மோதும்
ஆசைத் தீ கோபமும் தீமையும் எண்ணும் நான்
பறக்க இயலாதன்றோ - அதை
நினைக்கவும் இயலாதன்றோ!!

சிட்டினைப் போலவே ஆசையும் கவலையும்
இல்லாத நெஞ்சம் வேண்டும் - சுமை
இல்லாத நெஞ்சம் வேண்டும் வண்ணப் -
பட்டுச் சிறகுடனே ஆகாயப் பெருவெளியில்
உலாவி வரவேண்டும் - கொஞ்சிக்
குலாவி வரவேண்டும்.!!

**ஈழநாடு 18.11.79**


# தாய்

கர்ப்பக்கிருகத்தில்
தெய்வம் இருக்கும்!
ஆனால் - எனது
தெய்வத்தினுள்ளேயே
கர்ப்பக்கிருகம் உள்ளது!!



# முரண்பாடு

உடையது விளம்பேல்
என்றார் அறிஞர்!
அறிவுரையை நான்
அனுசரித்திருந்தேன்!
இப்போது என்மேல்
வருமானவரி ஏய்ப்பு
பதுக்கல் எனப்பல
குற்றம் சுமத்திக்
குற்றவாளிக் கூண்டில்
நிறுத்தியுள்ளார்கள்!



**தீபம் டிசம்பர் 79**

# குரங்கு அண்ணா தாவுறார்!!

குரங்கு அண்ணா தாவுறார்!
குரங்கு அண்ணா தாவுறார்!!

குடைப் பிடியைப்
போல வளைந்த
வாலுள்ள குரங்கு அண்ணா
கிளைக்குக் கிளைதாவுகிறார்!

குரங்கு அண்ணா தாவுகிறார்!
குரங்கு அண்ணா தாவுகிறார்!!

காயைப் பிடுங்கிக் கடிக்கிறார்!
கடித்த காயை எறிகிறார்!!
நாயின் குரலைக் கேட்டவுடனே
காயும் பழமும் உதிரும் படியே.......

குரங்கு அண்ணா தாவுகிறார்!
குரங்கு அண்ணா தாவுகிறார்!!

கடிப்பதெல்லாம் அவருக்கு
கரும்பைப்போல இருக்குமாம்!
பிடிப்பதெல்லாம் அவருக்கு
இரும்பைப் போல இருக்குமாம்!!

குரங்கு அண்ணா தாவுகிறார்!
குரங்கு அண்ணா தாவுகிறார்?



**ஈழநாடு 20.01.80**

# நான் பாட வேண்டும்



பன்னூறு கவிதைகள்
நான் பாட வேண்டும்!
என்றென்றும் நற்பயனை
அவை நல்க வேண்டும்!!

மக்களிடையே நிலவும்
சிக்கல்கள் யாவினையும்
கருவாகக் கொண்டு நான்
கவி பாட வேண்டும்!!

மக்களை வருத்துகின்ற
சிக்கல்கள் மறைந்திங்கு
மக்களிடை நல்வாழ்க்கை
மலர்ந்திடவே பாடிடுவேன்!

பாதியிலே வந்துற்ற
சாதிக் கொடும் பிணியால்
பாதித்த மக்களின் நல்
வாழ்வுக்காய்ப் பாடிடுவேன்!

வாழும் வயதடைந்த
வனிதையாரின் வாழ்வழித்து
வாழும் சீதனப்பேயின்
வாழ்வழிக்கப் பாடிடுவேன்!!

உழவர்களைப் பாடிடுவேன்!
உழைப்பவரைப் பாடிடுவேன்!!
உழைப்பபைச் சுரண்டியுண்ணும்
உலுத்தர்களைச் சாடிடுவேன்!!

மக்களின் வாழ்வழிக்கும்
மதுவரக்கனை ஒழித்து
மக்களிடையே புதுவாழ்வு
மலர்ந்திடவே பாடிடுவேன்!!

இறையின் அருளினையும்
இயற்கை அழகினையும்
குறைவின்றிக் கவிதைகளில்
நான் பாட வேண்டும்!

**சுடர் பங்குனி 1980**

## சத்தியம் பேசு தம்பி!

சத்தியம் பேசு தம்பி - புவியில்
நித்தியம் நிலைத்து வாழும்
சத்தியம் மட்டும் பேசும் - உயர்
பத்தியம் காக்க வேண்டும்!

சத்திய வழியில் நின்றால் - என்றும்
மெத்தவே தொல்லை உண்டு!
இன்னல்கள் பலவும் சேரும் - இன்னும்
துன்பங்கள் பலவும் சூழும்!

துன்பங்கள் சூழக் கண்டு - சற்றும்
துவண்டிடக் கூடாதுள்ளம்
இன்னல்கள் நேரும் போதும் - உன்தன்
இன்முகம் காட்டி நிற்பாய்!



சத்தியன் அரிச்சந்திரன் அன்று - தந்த
சத்தியம் காக்க வேண்டி
புத்திரன் மனைவி விற்றான் - பின்னும்
எத்தனை துன்பம் ஏற்றான்!

சத்தியம் விரதம் காத்த - எங்கள்
சத்திய மூர்த்தி காந்தி
சத்தியத் துணையைக்கொண்டு - மண்ணில்
எத்தனை பணிகள் செய்தார்!

சத்திய விரதம் காப்போர் - என்றும்
இத்தரை மக்கள் நெஞ்சில்
நித்தியமாக வாழ்வார் - எனவே
சத்தியம் பேசு தம்பி!

**ஈழநாடு 04.05.08**

# தோணியாவது கீதம்

ரோம் நகரம்
தீப்பிடித்து
எரிகின்ற போது
நீரோ மன்னன்
பிடில் வாசித்தான்!
ஏனெனில் -
'துன்பக் கடலைத்
தாண்டும் போது
தோணியாவது கீதம்'
என்பதனாலே!!



**தீபம் மார்ச் 80**

## தேர்தல் காலமது.............

ஐந்தாண்டின் முன்னர்
ஏறிச் சென்ற பின்னர்
எட்டி உதைத்துவிட்ட
வாக்குறுதி ஏணிகளை
ஐந்தாண்டு முடித்து
மீண்டும் இறங்கி வந்து
தூக்கியதை நிறுத்தி
மீண்டும் ஒரு தடவை
வாக்குறுதி ஏணிமேல்
ஏறிச் செல்வதற்கு
முயலுகின்ற காலமெது?



**தீபம் ஏப்ரல் 80**

## மரங்கள் வேண்டாம்

மரங்கள் மென்மேலும்
வளர்வதனை நாம்
தடுக்க வேண்டும்!
ஆமாம்......
அவையின் நடுவே
நீட்டோலை வாசியாது நிற்கின்ற -
குறிப்பறிய மாட்டாது நிற்கின்ற -
மானிட மரங்கள்
எதிர்காலத்திலும்
சமுதாயச் சோலையில்
வளரவிடாது
தடுக்க வேண்டும்!



**தீபம் ஜுலை 80**

# சொல்லும் செயலும்!

ஓடி விளையாடி
விழுந்த தன் மகனைத்
தூக்கிவிட்ட அவனன்னை -
" ஏன்டா வீணாக
ஓடி விளையாடி
விழுந்தாய் ? " என்று
மகனிடம் கேட்டபோது
"நீதானே அம்மா
காலையிலே எனக்கு
ஓடிவிளையாடு பாப்பாப்
பாட்டை சொல்லித் தந்தாயே"
என்றான் அவள் மகன்!



**வீரகேசரி 09.08.81**

# பணம் !

பணத்தை எண்ணிக்
கணக்குப் பார்த்துச்
செலவு செய்தேன்
கருமி என்றார்கள்!!



பணத்தைப் பணமென்று
கருத்திற் கொள்ளாது
செலவு செய்தேன்!
ஊதாரி என்றார்கள்!!

என் உழைப்பால்
சேர்த்த பணத்தை
கறுப்புப் பணமென்றும்
பேசிக் கொண்டார்கள்!

கடன் கேட்டான்!
கொடுத்த போது
கர்ணன் என்றான்
உறவும் கொண்டான்!!

கொடுத்த கடனைத்
தரும்படி கேட்டேன்!
பகையும் கொண்டான்!
கருமி என்றான்!!

**வீரகேசரி 20.07.80**

# ஏனாம்?

"நாடுநலம் பெற
பொருள்வளம் சிறக்க
பயிர் செய்யுங்கள்"
என அரசாங்கம்
விடுத்த அழைப்பை
ஏற்றுக்கொண்டவர்
கடுமையாயுழைத்தார்!
காட்டை அழித்தார்!
"பருவத்தே பயிர்செய்"
எனும் அறிவுரைப் படியவர்




பருவம் பார்த்துப்
பயிரிட்டார்!
இதனைக் கண்டு
நாடு வாழ்ந்திட
பாடுபடும் அவரைத்
தட்டிக் கொடுக்காது
சட்டம் அவரைக்
கைது செய்தது!
சிறையுள் வைத்தது!
ஏனெனில் - அவர்
பயிரிட்டதுவோ
கஞ்சாப்பயிராம்"



ஈழநாடு 24.05.81

# பல்லி சொற் பலன்

" பல்லி எங்கோ சொல்கிறது
பல்லிசொற் பலன்பார்க்க - என்
பத்தினியாளே விரைவாக
பஞ்சாங்கத்தைக் கொண்டுவா"




பத்தினியாள் கொண்டு தந்த
பஞ்சாங்கத்தின் பக்கங்களை
பலன் பார்க்கப் புரட்டுகையில்
பல்லி என் இடக்கை மேல் விழவே -

பல்லியின் மேலே சினங்கொண்டு
பல்லியைக் காலால் நசுக்கி விட்டு
'பல்லி வீழ்' பலன் பார்த்தேன்!
பலன் 'மரணம்' என்றிருந்தது!!

ஈழநாடு 24.08.80

# பாசம் தந்த மோசம்



ஓடும் பஸ்ஸில்
எனது அருகினில்
அமர்ந்திருந்தவர்
எனது குழந்தையின்
பட்டுக்கன்னத்தில்
செல்லமாக
முதலில் கிள்ளினார்!
பாசம் என்று
பேசாதிருந்தேன்!
“ பூக்கை” என்று
குழந்தையின் கையை
முத்தமிட்டார்!
“ குழந்தை மேல் இவருக்கு
ஆசை போலும்’
என்று எண்ணி
பேசாதிருந்தேன்!
குழந்தையுடனே
விளையாடியவர்
சிறிது நேரத்தில்
இறங்கிப் போனார்!
நான் காணவில்லை!
பஸ்ஸை விட்டு
நான் இறங்கும்
போது தான்
குழந்தையின்
கையைக் கவனித்துப்
பார்த்தேன்!
குழந்தையின் கையில்
பூட்டியிருந்த
பவுண் காப்பு
இரண்டில்
ஒன்று இல்லை!
குழந்தையுடனே
பழகியவர்க்கு
குழந்தையைப்பிரிந்து
செல்லும் போது
குழந்தையின் நினைவாக
ஏதாவது ஒன்றினை
எடுத்துச் செல்ல
விரும்பினார் போலும்!
அதனால் தானோ
குழந்தைக்குப் பூட்டிய
இரண்டு காப்பில்
ஒன்றினைக் கழற்றிக்
கொண்டு போனார்!
பாசம் என்றெண்ணி
மோசம் போனேன் நான்!!


ஈழநாடு 02.11 80

# சீதனம்

சீதனம் இருந்தால்
கன்னியர் வாழ்வு
தொடர் கதையாகும்!
சீதனம் இல்லையேல்
கன்னியர் வாழ்வு
சிறுகதையாகும்!
கன்னியர் வாழ்வு
செழிப்பதற்காக
இடப்படுகின்ற
உரக்கலவையிது!
மனைவி என்னும்
பதவிக்காத் தரப்படுகின்ற
கையூட்டாகும்!
நல்ல கவிதையாக
மிளிர வேண்டிய
கன்னியர் வாழ்க்கை
இச்சொற் பஞ்சத்தால்
கண்ணீர்க் காவியமாவதுண்டு!
கன்னிப் பெண்கள்
இல்லற வண்டியில்
பயணம் செய்திட
பயணச் சீட்டு
வாங்குவதற்காக
தரப்படுகின்ற
பயணக்கூலி



கன்னியர் என்னும்
பூங்கொடி படர்ந்திட
மரங்களை வாங்கிட
மரங்களுக்குத் தரும்
மரங்களின் பெறுமதி!



**வீரகேசரி 04.01.1981**

# தேர்தல் இரவினிலே.......................

தேர்தல் இரவுகளில்
வாக்குறுதி மழை பெய்யும்!
பெய்யும் மழை கண்டு
விலைவாசி முதலான
வெப்பத்தால் வரண்டு
வாடிய ஏழையுள்ளம்
வாழ்வு வந்ததென்று
சிலிர்த்துத் தலைநிமிர்த்தும்!
தோகையெனக் களித்தாடும்!
வெற்றிச் சூரியன்
உதயமானவுடன்
வாக்குறுதி மழையின்
ஈரமே காய்ந்துவிடும்!
மழையின் அடிச்சுவடும்
வற்றி வரண்டுவிடும்!
சிலிர்த்தெழுந்த ஏழைப்பயிர்
மீண்டும் வாடிவிழும்
" மீண்டும் எப்போது
தேர்தல் இரவுகளில்
வாக்குறுதி மழை பெய்யும்?"
என்றெண்ணி ஏங்கி நிற்கும்!

**தீபம் மே 81**

# ஆசையும் அலையும்

கடல்நீர் சலனம் அடைவதேன்?
நீரைக் காற்று அலைப்பதால்!
உடலில் புலன்கள் கிளர்வதேன்!
ஆசைக் காற்று அலைப்பதால்!!

❖

கடலில் அலைகள் எழுவதேன்?
தண்ணீர் சலனம் அடைவதால்!
உடலில் ஆசைகள் எழுவதேன்?
புலன்கள் சலனம் அடைவதால்!!

❖

அலையில் வெண்நுரை வருவதேன்?
அலைகள் அலைந்து வருவதால்!
தலையில் வெண்நரை வருவதேன்?
புலன்கள் அலைந்து திரிவதால்!!

❖

கடலில் தோன்றும் அலையெலாம்
கரையைச் சேர்வ தில்லையே!
உடலில் தோன்றும் ஆசையும்
அலையைப் போன்ற தாகுமே!!

ஈழநாடு 11.01.81



## ..........வேண்டும் தாரம்?



இன்பமுடன் வாழ்வதற்கு
வேண்டுவது பொருளாதாரம்!
துன்பம் அதர்மம் மிகும்போது
தோன்றும் இறைவன் அவதாரம்!!
ஏழைமக்கள் வாழ என்றும்
வழங்க வேண்டும் நல்லாதாரம்!
நாளைய எமது வாழ்வு செழிக்க
விலக்க வேண்டும் பொருட்சேதாரம்!!
சுகமுடனே நாங்கள் வாழ
பேணவேண்டும் சுகாதாரம்!
சுகமுடனே குடும்பவாழ்க்கை
வாழத்தேவை நல்லதாரம்!!

**சுடர் பங்குனி 81**

## குடைகள்



உழைக்கும் நாங்கள்
குடைகளைப் போன்றோர்!
வேண்டும் போதினில்
உழைத்துக் கொடுப்போம்!
வேண்டாப் போதினில்
ஒதுக்கப்படுவோம்!
வெயிலும் மழையும்
எங்கள் உடம்பினில்
ஆனால் ....................
எங்கள் உழைப்பின்
பலன் எமக்கில்லை!


## ஒற்றுத்தாள்கள்!

உழைக்கும் நாங்கள்
தேநீர்க் கோப்பைகள்!
உழைப்போம் - ஆனால் ..........
உழைப்பின் பலனைப்
பெறுவதே இல்லை!
உழைப்பின் பலனை
அனுபவித்திடவே
என்று தான் நாங்கள்
ஒற்றுத்தாள்களாவோம்?



## களையெடுப்பு!

ஒழுங்கில்லாத
தலை முடிகளிடையே
ஒழுங்கினை
நிலைநாட்ட
முனைகின்ற போது
சீப்பின்
ஆணைக்கு
உட்பட மறுக்கின்ற
தலை முடிகளைச் சீப்புக்
களையெடுக்கின்றது.



**வீரகேசரி 03.05.81**

# பால்




அப்பால் இப்பால் என்று
தப்பாது கணக்கிட்டால்
பாலில் பலவகைகள்
பாரில் சொரிகின்றன!

தமிழில் பால் ஐந்து!
ஆண்பெண் என்பதுடன்
பலர்பால் என மூன்றுடனே
ஒன்றன்பால் பலவின்பால்
சேர்ந்தவுடன் பால் ஐந்து!

வையகமே போற்றுகின்ற
வள்ளுவனார் எங்களுக்கு
அறம்பொருள் இன்பமென
தந்ததுவே முப்பாலாம்!

அன்னை தரும் பாலில்
அமுதச் சுவைமிளிரும்!
உடம்புக்கும் மனதுக்கும்
உவப்பான பாலமுதம்!!

பசுக்கள் தரும் பாலை
பக்குவமாய்க் காய்ச்சியதை
பருகும் போதினிலே
பெருகும் சுவையதிகம்!

கட்டவிழ்த்துப் போகாது
கட்டிப்பழக்கி விட்டால்
ஐம்புலனாம் பசுவைந்தும்!
பாலாய்ச் சொரியுமென்றார்!

தேங்காய்த் துருவலினை
கசக்கிப்பிழிந் தெடுக்கும்
பாலில் உணவுவகை
சமைத்தால் மிகச்சுவையே!

ஆனால் ...........
தென்னை பனையினது
பாளைகள் பொழிகின்ற
பாலைப் பருகிவிட்டால்........
பொருளுக்கும்
பெருஞ்சேதம்
உடலுக்கும் பெரும்நாசம்!

**ஈழநாடு 03.05.81**

# எதிரொலி

தோல்விகள்
தழுவும் போது
வெற்றிகள்
சரியும் போது
இன்பங்கள்
மறையும் வேளை
துன்பங்கள்
நிறையும் வேளை
சக்திகள்
தளரும் போது
பக்திதான்
வளருதிங்கே.



**சிரித்திரன் செப்.81**

# என்றோ ஒருநாள்!


உழைத்து உழைத்து
குனிந்து குனிந்து
கூனிய முதுகு,
ஒருநாள்.......
கூனலை நிமிர்த்தி
விஸ்வரூபமெடுத்து -
உயர்ந்து நிமிர்ந்து நிற்கும்!
அவ்வேளையில்
மாடி வீட்டுக்
கூரைகளெல்லாம்



இரண்டாகப் பிளக்கும்!
அதுவரை காலமும்
கூனல் முதுகில்
ஏறி அமர்ந்து -
செர்குசுச் சவாரியில்
மகிழ்ந்தவர்
எங்கேயோ போய்
வீழ்ந்து துடிப்பார்!
பொறுத்தவர் ஒருநாள்
பொங்கியெழுவார்!
கங்குல் அகலும்!
அதுவரை காலமும்........
சவாரி தொடரட்டும்.!

**பூபாளம் 1982**

# எங்கள் திறமை



எங்கள் திறமைகள்
எண்ணிலடங்கா!
அவற்றில் இரண்டு
இதன் கீழுண்டு

மண்கல் கொண்டு
வீடுகள் கட்டி
வாழலாம் என்றுதான்
அன்று நாம் கண்டோம்!
இன்றோ நாங்கள்
செங்கற்களையும்
கூரை ஓடுகளையும்

மண்ணையும் கல்லையும்
சீமெந்தினையும்
உணவுடன் அளவாய்க்
கலந்து உண்ணலாம்
என்றறிந்துள்ளோம்!



மின்குமிழுக்கு
மின்னைப் பாய்ச்சி
ஒளியைப் பெற்றிட
ஆய்ந்தறிந்தவர்கள்
மேலைநாட்டினர்!
ஆனால் -
பழுதடைந்த
மின்குமிழுக்கு
நிலநெய் ஊற்றி
பழந்துணியினிலே
திரியுமிட்டுத் தீயிட்டாலதில்
ஒளிபெற்றிடலாம் என
கண்டறிந்தவர்கள்
எம்மவர்கள்தான்!

எங்கள் திறமைகள்
இப்படிப் பலப்பல !
எடுத்து விரித்தால்
எண்ணிலடங்கா!!

**சுடர் மாசி பங்குனி 1982**

# அனுபவம்



கடந்த காலத்தின்
அடிச் சுவடுகள்!
எதிர்காலத்தின்
படிக்கற்கள்!

நாளைய
கட்டிடத்தின்
நேற்றைய
அத்திவாரம்!



கடந்தபோரின்
விழுப்புண்கள்!
வரும் போரின்
கவசங்கள்!

**சிரித்திரன் டிசம்பர் 82**

# சரித்திரம்

செம்பு என்ற
பிறப்பெடுத்தேன்!
தந்திக் கம்பியாய்
நான் வளர்ந்தேன்!
தங்கத்துடன்
மணங்கொண்டேன்!
என் திருமணம் கூட
ஒரு வகையான



சீர்திருத்தத் திருமணம்தான்!
அது கலப்புத் திருமணம்!
அதனால்தான்
நானின்று
தங்கம் என்று
பெயர் பெற்று
நிலையுயர்ந்தேன்!

— — — —

**கோகிலம் 83 ஆவணி**

# மலர் சொல்லும் தத்துவம்



வாழ்ந்து பார்த்த மலர் - மண்ணில்
வீழ்ந்து கிடக்கிறது!
வாழ்வின் தத்துவமே - அதனில்
ஆழ்ந்து கிடக்கிறது!

❋

காலையில் முகம் மலர்ந்து - கொடியில்
ஆடிச் சிரித்திருந்து
மாலையில் முகம் கருகி - வாடி
வீழ்ந்து மடிகிறது!

❋

மலர்ந்த மலர்க ளென்றும் - கொடியில்
தொடர்ந்து இருப்பதில்லை!
உலகில் பிறந்த மக்கள் - மண்ணில்
நிலைத்து வாழ்வதில்லை!

❋



அழகு இளமை செல்வம் - என்றும்
நின்று நிலைப்பதில்லை!
சுழலும் உலகில் இதை - யாரும்
எண்ணிப் பார்ப்பதில்லை!

வாழ்வு வந்து விட்டால் - பின்னால்
தாழ்வும் கூடவரும்!
தாழ்வு முன்னிருந்தால் - நல்ல
வாழ்வும் பின்னர் வரும்!

❄

பிறந்தால் இறப்பு வரும் - இதில்
ஐயம் ஏதுமில்லை!
இறந்தால் பிறப்பு வரும்! - பற்றுத்
துறந்தார்க் கிதுவிலக்கு!

❄

உதிரும் மலரைக் கண்டு - எமது
உள்ளம் தளர்தல் வேண்டாம்!
உலகில் வாழும் வரை - என்றும்
நன்றே வாழ்ந்திருப்போம்!

❄

வாழ்ந்த காலம் அல்ல - எப்படி
வாழ்ந்தோம் என்பதையே
ஆழ்ந்து நோக்க வேண்டும் - அப்படி
வாழ்வை அமைக்க வேண்டும்!

**ஈழநாடு 11.02.84**
**வெள்ளி விழா மலர்**



# என்னத்தான் என்ன சொன்னார்............



அன்புடன் அத்தான் என்னை
தன்னுடன் அணைத்துக் கொண்டு
என்னத்தான் அன்று சொன்ன
வார்த்தைகள் பற்றி நானும்
இன்றும்தான் எண்ணிப் பார்த்து
வியப்புடன் பாடும் பாட்டை
அன்பர்காள் பாடிப் பார்ப்பீர்!
என்னதான் நினைக்கின்றீரோ?

★

கருங்குழல் முகிலே என்றார்!
நுதல்து பிறையே என்றார்!
இருவிழி கயல்கள் என்றார்!
புருவங்கள் வான்வில் என்றார்!
இருவிழி மணிகள் வானில்
சுழன்றிடும் சுடர்கள் என்றார்!
இரவிக்கு மலர் வதான
கமலம் உன் முகமே என்றார்!

★

கழுத்தினைப் பார்த்த அத்தான்
சங்கதோ கழுத்தோ என்றார்!
கைகளைத் தொட்டுப் பார்த்துச்
செவ்வாழைத் தண்டே என்றார்!
கைவிரல் வருடிப் பார்த்துக்
காந்தள்தான் இவைகள் என்றார்!
கன்னத்தை மென்பட்டெ என்றார்!
குயிலது குரல்தான் என்றார்!



அதரங்கள் கொவ்வை என்றார்!
பற்களோ முத்து என்றார்!
இதம் தரும் தனங்கள் இரண்டும்
செவ்விள நீர்கள் என்றார்!
இடையினை உடுக்கை என்றார்!
மானது நோக்கு என்றார்!
நடையினைப் பார்த்த அத்தான்
அன்னமே தோற்கும் என்றார்!

★

அன்புடன் அத்தான் சொன்ன
இவைகளைக் கேட்ட போது
என்னுள்ளே சிரிப்புத் தோன்ற
மென்னகை புரிந்து கொண்டேன்!
"புன்னகை ஏனோ?" என்றார்!
என்னை நான் மறைக்கவில்லை!
என்னையேன் பிரமன் பாரில்
இப்படிப் படைத்தான்? என்றேன்!

★

இவ்விதம் சலிப்பு ஏனோ?
என்றுஎன் அத்தான் கேட்டார்!
"ஒவ்வொன்றில் கொஞ்சம் கொஞ்சம்
எடுத்துஏன் படைத்தான் என்னை?
இவ்விதம் படைத்த என்னில்
எனக்கென்று என்ன உண்டு?
இவ்விதம் கேட்ட போதில்
"கிளிமொழி உனது" என்றார்!

ஈழநாடு 22.07.84



# எமது கண்டுபிடிப்பு

எம்மவர் திறமைகள்
எத்தனை! எத்தனை!!
எடுத்துரைத்தாலோ
கண்ணீர் பெருகும்!
ஆனந்தத்தாலோ?
ஆத்திரத்தாலோ?



நெல்லை அவித்து
உலர்த்தி உடைத்து
அரிசியாக அதை
உருமாற்றும் போதிலும்
நெல்லுடன் இருக்கும்
கற்கள் எதுவுமே
உருவம் மாறாது
சிறிதும் சிதையாது
அரிசியிலும் அவை
தரிசனம் தரும்படி
செய்யவல்லார் எவர்?
எம்மவர்! எம்மவர்!!

பப்பாளிப் பழத்தின்
உலர்ந்த விதைக்கும்
காரம் மிக்க
மிளகு விதைக்கும்
உருவத்தில் ஒற்றுமை
உண்டென்பதனை
கண்டவர் எவரோ?
நம்மவர்! நம்மவர்!!
இப்படி விரிக்கலாம்!
எப்படி முடிக்கலாம்?

சிரித்திரன் அக்டோபர் 84

# துணைவிக்கு ஒரு கடிதம்......



பலநூறு மைல்தூரம்
இப்பால் நான்
இருக்கின்றேன்;
என்னுயிர்த் துணைவியவள்
தன்னுடைய குழந்தையுடன்
பலநூறு மைல் தூரம்
அப்பால் இருக்கிறாள்;
அவளுக்கு ஒரு கடிதம்
அவசரமாய் எழுதுகின்றேன்!
அவசியமாய் இருப்பதனால்
அவளுக்கு எழுதுகின்றேன்!

வெள்ளைப் பசு தந்த
பாலுடனே சோற்றினையும்
தேங்காய்ச் சிரட்டையிலே
போட்டுப் பிசைந்தெடுத்து
ஒக்கலையில் எம்மகனை
இருத்திச் சிறு வீட்டின்
முற்றத்தில் நடை பயின்று
சோறூட்டும் வேளையிலே
என்னுடைய இக்கடிதம்
உன் கையில் வந்து விழும்!
பொருத்தமான நேரம் இது!
கடிதத்தின் கருத்தை
கருத்தில் இருத்திக் கொள்!
பொதுவாகத் தாயார்கள்
தம்முடைய பிள்ளைகட்கு
உணவூட்டும் வேளையிலே
என்ன சொல்லி ஊட்டுகிறார்......................?

உணவூட்டும் வேளையிலே
காக்கைகள் வந்திருக்கும்!
காக்கைகளைக் காட்டி
"கெதியாய்ச் சோற்றைத் தின்!
காக்காய் பறித்துவிடும்"
என்று மிரட்டிடுவார்!
குழந்தை வாய் திறக்கும்!
சோற்றை ஊட்டிடுவாள்!
அந்த நேரத்தில் தான்
அயல்வீட்டுப் பிள்ளையவன்
அங்கே வந்திருப்பான்!
"அண்ணன் வந்து விட்டான்
அவனுக்குக் கொடுத்திடுவேன்
கெதியாய்ச் சோற்றைத் தின்"
என்று பயம் காட்ட
எந்தன் சிறுபிள்ளை
சோற்றைத் தின்றுவிடும்!
சிந்தியுள்ள சோற்றைக்
கொத்தித் தின்பதற்கு
உணவு தேடி அலைகின்ற
கோழிகள் அங்கு வரும்!
அவற்றை விரட்டி விட்டுப்
"பிள்ளையின் சோற்றைக்
கோழி கேட்கிறது!
நீ சோற்றைக் கெதியாய்த் தின் !
இல்லையேல் கொடுத்திடுவேன்"
என்றவுடன் குழந்தை
'தண்ணுணவு பறிபோமோ -
எனும் அச்சம் காரணமோ -
என்னவோ - தின்றுவிடும்!
வீதி வழியாகக்

கூனல் முதுகுடனே
நரைத்த தாடியுடன்
கந்தல் உடையுடனே
கையிலொரு தடியுடனே
முதுமை வலிந்தணைத்த
கிழவன் போவதனை
எப்போதோ கண்டதனை
இப்போது நினைவூட்டிக்
குழந்தைக்குப் பயமூட்டி
உணவதனை ஊட்டிடுவாள்!
உன்னை வளர்த்தவளும்
என்னை வளர்த்தவளும் - பின்
எப்படித்தான் வளர்த்திருப்பார்?
இப்படித்தான் வளர்த்திருப்பார்!
தாயாரும் உணராது
யாரும் தான் அறியாது
குழந்தையின் மனத்தினிலே
போட்டி மனநிலையை
ஊட்டிவிடுகின்றார்!
அச்ச உணர்வுகளை
உணவுடனே ஊட்டுகின்றார்!
அடுத்தவர்க்கும் தன் பொருளைக்
கொடுக்காத குணமதனைப்
பிஞ்சு மனதினிலே
அறியாது பதிக்கின்றார்!
இது தான் இரகசியம் !
இதுதான் உண்மைநிலை!
இந்தக் குழந்தை
வளர்ந்து வந்தபின்னர்
என்னென்ன செய்வான்?
பிறரைக் கண்டு





அஞ்சுபவனாக -
பிறருக்கு உதவிடத்
தயங்குபவனானக -
அடுத்தவர் மேலே
பொறாமைக் குணம்
கொண்டவனாக -
எங்கள் மகன் வளர்வான்
என்பதனை எண்ணிப்பார்!
வாழையடி வாழையென
வளர்ந்து வந்த பழக்கமிது
நாளான பழக்கமிதை
பாழான பழக்கமிதை
புதியதொரு பாதையிலே
திசைதிருப்ப வேண்டுமடி
நீதிமிகு கதைசொல்லிப்
பாலகனை நீராட்டு!
வீரக்கதை சொல்லிப்
பாலனுக்குப் பாலூட்டு!
கருணைமிகு கதைசொல்லிக்
கண்மணிக்குச் சோறூட்டு!
அறிவுமிகு கதைசொல்லித்
திருமகனைத் தாலாட்டு!
புதியவிப் பாதைக்கு
நீயே வழிகாட்டி!
இப்பொழுதே உன்வீட்டில்
இப்பணியைத் தொடக்கிவிடு!
உனக்குத் தெரிந்தவர்க்கும்
இக்கருத்தை எடுத்துச் சொல்!
வாசித்து மகிழ்வெய்த
வழக்கம் போல எழுதவில்லை!
படித்துவிட்டுக் கடிதத்தை
மடித்து வைத்து மறக்காதே .................

ஈழநாடு **02.12.84**

# இணைப்புகள் பொருந்தாதாயின்......?

எது எது இணைந்தால் நன்று ?
எது எது இணைந்தால் தீது?
இதுபற்றிச் சொன்னால் நன்று
என்பதால் சொல்வேன் இங்கு.

அன்புள்ளான் பொருளைச் சேர்த்தால்
இன்பமே உலகை ஆளும்!
அன்பிலான் பொருளைச் சேர்த்தால்
துன்பமே உலகைச் சூழும்!!

பண்பிலான் பலத்தைப் பெற்றால்
துன்பமும் துயரும் ஓங்கும்
பண்புள்ளான் பலமும் பெற்றால்
நீதியே எங்கும் ஓங்கும்!!

அறிவுள்ளான் கையில் கத்தி
இருப்பதால் அச்சம் இல்லை!
அறிவில்லான் கையில் கத்தி
இருந்திடின் மிச்சம் இல்லை!!

உழைப்புடன் இயற்கை கூடின்
அளப்பிலாச் செல்வம் சேரும்!
உழைப்புடன் இயற்கை சீறின்
களைப்புத்தான் மிகுதியாகும்!!

பாலடன் தேனும் சேர்த்துப்
பருகினால் சுகம் உண்டாகும்!
பாலுடன் விஷமும் சேர்த்தால
வரும் பயன் அறிவீர்தானே

இணைப்புகள் பொருந்தி வந்தால்
விளைவெலாம் நன்மையாகும்!
இணைப்புகள் பொருந்தாதாயின்
விளைவெலாம் துன்பந்தானே



**ஈழநாடு 03.03.85**

# ஏன் வீழ்ந்ததுவோ?

ஒற்றைப் பனையென்
வளவின் எல்லையில் -
வடக்கு எல்லையில் -
நிமிர்ந்து உயர்ந்து
வளர்ந்து நிற்குது!

சோழகம் வந்ததை
ஆட்டி ஆலைக்கும்!
வில்லைப் போலதை
வளைக்கும்! நெளிக்கும்!
வளைப்பதைப் பார்த்தால்
பயமாயிருக்கும்!

காலை நேரம்!
முற்றத்தில் நின்றேன்!
எல்லையில் நிற்கும்
பனையிலிருந்து
'சரசர வென்ற
சத்தம் எழுந்தது!
நிமிர்ந்து பார்த்தேன்!
பனையிலிருந்து
ஓலை ஒன்று
வீழ்ந்து மடிந்தது!



என் கண்ணெதிரில்
இது நடத்ததனால்
' ஏன் விழுந்தது? என
விசாரணை செய்தேன்!

'வயது முதிர்ந்ததால்
கைபிடி தளர்ந்ததால்
விழுந்தது' என்றார்
முதியவர் ஒருவர்!

"முதுமையின்
கொடுமையால்
மனமுடைந்ததனால்
வீழ்ந்தது" என்று
விளக்கினார் ஒருவர்!

' உச்சியில் உள்ள
இளசுகளினது
கேலிப் பேச்சுகள்
கிண்டல் கதைகளைத்
தாங்க முடியாது
வீழ்ந்து மடிந்தது என
மற்றவர் சொன்னார்!

"முதியவர் ஒருவர்
தம்முடன் இருப்பதை
விரும்பாத இளசுகள்
திட்டமிட்டுச்
செய்தது இது" என
சொன்னவரேதான்
" உச்சிலிருந்தது
விழ்ந்த போது
'கலகல'வென்று
இளசுகள் சிரித்தன!
அவற்றின்சிரிப்பில்

ஐயுறுகின்றேன்"
என்று முடித்தார்!
எதற்காய் வீழ்ந்தது?
அதற்கே தெரியும்!

நில்லா இளமையை
நில்லா வாழ்க்கையை
மெல்ல வீழ்ந்தது
சொல்லுகின்றதோ?

ஈழநாடு **23.06.85**

## மறதி

மனங்களில் தோன்றிடும்
துன்பம் துயர்களைக்
களைந்து வாழ்ந்திட
மக்களின் துணைநீ!

உன்துணை இல்லையேல்
துன்பம் துயர்களால்
என்றுமே மக்களின்
நெஞ்சம் கலங்குமே!!



கடன் பெற்றவர்களின்
மனத்தில் நீ இருப்பதால்
கடன் கொடுத்தவர்கள்
கண்ணீர் பொழிகிறார்!

நன்மைகள் பெற்றவர்
நெஞ்சிலேன் இருக்கிறாய்?
துன்பங்கள் செய்தவர்
நெஞ்சிலேன் நிறைகிறாய்?

பயணத்தில் சிலருடன்
பயணம் நீ செய்வதேன்?
பயணப்பை பணமெலாம்
இழந்தவர் தவிக்கவோ?

மாணவர் கல்வியில்
மேன்மை பெற்றிட
மாணவர் உளங்களில்
இருப்பதைத் தவிர்த்திடு!


விரும்பாத எவருக்கும்
விரும்பாத உதவியை
விரும்புடன் தவிர்த்திட
அரும்பெரும் துணைநீ!

அனைவரின் நெஞ்சிலும்
நீகுடி இருப்பதால்
நினைவு நாள் விழாக்களை
மக்கள் மதிக்கிறார்!

ஈழநாடு 07.07.85

## மனிதர்கள்

யாருமோர் பணியைச் செய்தால்
அப்பணி யதனில் உள்ள
பேசரும் நலங்கள் பற்றி
யாருமே கூற மாட்டார்!
கூறுமப் பணியில் உள்ள
குறைகளை எடுத்துச் சொல்வார்!!
கூறுமக் குறைகள் போக்க
உதவியும் செய்ய மாட்டார்!



பொதுப்பணி செய்ய வாய்த்தால்
முடியுமப் பணியால் மக்கள்
பெறும் நன்மை எவைக ளென்று
எண்ணுவோர் இல்லை என்பேன்!
பொதுப் பணி செய்யும் போதில்
அப்பணி முடிவில் தாம் தாம்
பெறும் நன்மை கணக்குப் பார்ப்போர்
எம்மிடை மலிந்து போனார்!!

❋

அயலவர் சிரித்து வாழ்ந்தால்
அது கண்டு கொதிப்பார் உள்ளார்!
அயலவர் அழுதாற் போதும்
அது கண்டு சிரிப்பார் உள்ளார்!!
பிறர்துயர் மலையென் றாலும்
கடுகெனச் சொல்வார் உள்ளார்!
தம்துயர் கடுகென் றாலும்
கடலெனச் சொல்வார் உள்ளார்!!

❋

போதனை செய்ய ஆட்கள்
தேவைக்கு மதிகம் உள்ளார்!
போதனை செய்வோ ரெல்லாம்
சாதனை செய்வோ ரென்றால்
போதனை செய்வோர் தம்மை
போற்றுதல் செய்வார் மக்கள்!
போதனைக் கர்த்த முண்டு!
வேதனைக் கிடமும் இல்லை!!

❋

உதவிகள் செய்தல் வேண்டும்
துன்பத்தில் உழலு வோர்க்கு!
உதவிகள் செய்ய ஆட்கள்
இல்லை யென்றாலும் - யாரும்
உதவிகள் செய்யும் போது
செய்கின்ற உதவி பற்றி
உதவிடும் நெஞ்சம் நோகச்
சொல்லிடப் பலபேர் உள்ளார்!!

*

மண்ணிலே வாழும் மக்கள்
பல்வகை ரகத்தைச் சேர்ந்தார்!
கண்ணிலே கண்ட மக்கள்
ரகத்திலே சிலதைச் சொன்னேன்!!
கண்ணிலே கண்ட வற்றைச்
சொல்லிய இதிலும் குற்றம்
கண்டிடப் பல பேர் உள்ளார்!
பண்பிது என்று போகும்?

ஈழநாடு 29.09.85

# மெழுகு திரி

பகட்டொளி வீசும்
மின்சாரம்
எதிர்பாரா நேரம்
காலைவாரிவிடும்
நேரங்களிலெல்லாம்
எங்களுக்குக்
(கை) கொடுக்கும்
தெய்வம் நீ!
விளக்கேற்றும்
ஒளிவிளக்கு!



ஆண்டவனை நாங்கள்
ஆராதிப்பதெல்லாம்
நீ சிந்துகின்ற
எளிய ஒளியில் தானே!
நாட்டுக்கு இனத்துக்கு
சேவை செய்யப்
புறப்படுபவர்கள்
எப்படியெல்லாம்
இருக்க வேண்டுமென
உன்னைப் போலன்றி
வேறு யாரால் தான்
விளக்க முடியும் ?
தொண்டினை நீயே
விளக்கு!
தொண்டுக்கு நீயே
விளக்கம்!!

**வீரகேசரி 15.12.85**

## மக்கள் இன்று பொங்கிறார்!

பொங்கல் இன்று
பொங்கல் தான்!
இங்கும் எங்கும்
பொங்கல் தான்!!

வீடு வாசல்
மாடு கன்று காணி பூமி
சொத்துச் சுகத்தை
இழந்த மக்கள்
தெருவில் நிற்கும்

தங்கள் நிலையை
எண்ணி ஏங்கிப்
பொங்கிறார்!
கண்கள் கலங்கிப்
பொங்கிறார்!!
உறவைத் துணையை
வாழ்வின் துணையை
உடன்பிறப்பை
உற்ற நட்பை
இழந்து தவிக்கும்
மக்கள் இன்று
பொங்கிறார்!
நெஞ்சங் கொதித்துப்
பொங்கிறார்!!

அனுபவித்தோர்
அதனைப் பார்த்தோர்
அருகில் உள்ளோர்
அயலில் உள்ளோர்
உறவு உள்ளோர்
உணர்வு உள்ளோர்
அனைவரும் நெஞ்சம்
பானை வைத்துப்
பாலை ஊற்றிப்
பயறு சர்க்கரை
அரிசியிட்டுப்
பொங்கினால் தான்
பொங்கலா?
இவையும் கூடப்
பொங்கல் தான்!
என்று முடியும்
இந்தப் பொங்கல் என்று
எவர் தான் அறிவரோ?

ஈழநாடு14.01.86



# விமரிசனங்கள்

இனசனத்தவரின்
விமரிசனங்களிவை?
சுற்றி இருப்பவரின்
சுடு சரங்களிவை?

குடும்ப நலன்களைக்
கவனித்துக் கொண்டேன்!
'சுயநலவாதி ' என்றார்கள்!
பொதுப்பணி செய்ய
முனைந்த என்னிடம்
'பணமுடை போலும்'
என்பது ஏன்?.

நாளைக்காகவும்
சேமித்த என்னைக்
'கஞ்சப் பேர்வழி'
என்றார்கள் !
எனதுழைப்பனைத்தையும்
செலவு செய்கையில்
'ஊதாரி' என்றவர்
முனகுவதேன்?


தேவைக்கு அளவாக
உழைத்த என்னைச்
'சோம்பேறி' என்று
பழித்தனர் அன்று !
ஓடி ஓடி நான் இன்று
உழைப்பதைக் கண்டு
'அவனுக்கும் இப்போது
ஆசைகள் அதிகம்'
என்று நகைக்கிறார்!

நாடிவந்தவர்க்கே
உதவிகள் செய்தேன்!
'உதவாக்கரையிவன்'
என்றார் - அதனால்
தேடித்தேடி நான்
உதவிகள் செய்கிறேன்!
'தேர்தலுக்கோ' என
வினவுகின்றனரேன்?

மதுவைத்தொடாது
வாழ்ந்த என்னைப்
பட்டிக்காடெனச்
சுட்டார்கள்!
மதுவுடன் பழகத்
தொடங்கிய வுடனெனைக்
'குடிகாரன்' என்றவர்
குமைகின்றனரேன்?

கார் இருந்தும் நான்
நடக்கும் தொலைவை
நடந்தே கடந்தேன்!
'கால் நடையிது' எனச்
சுட்டினர் - அதனால்
நடக்கும் தொலைவையும்
காரில் கடந்தேன்!
'வீண்பகட்டிது'
என விம்முகின்றரேன்?

சட்டத்தை மதித்து
வாழ்ந்த எனக்குப்
'பயந்தவன்' என்று
பட்டம் சூட்டினார்!
சட்டத்தை மிதிக்கத்
தொடங்கிய என்னை
'முரடன்' என்றவர்
ஒதுக்குகின்றார்கள்!
ஒதுங்குகின்றார்கள்!



அநீதிச் செயல்களை
அநியாயங்களைக்
கண்டும் கேட்டும்
'நடப்பது எதுவும்
நன்மைக்கு' என்றே
பேசாதிருந்தேன்?
'ஊமையனிவன் ' என
உதைத்தனர் என்னை!
நீதி நியாயத்தைக்
தட்டிக் கேட்டேன்?
'சட்டமேதை 'யெனச்
சொட்டை
சொல்கிறார்?

சுற்றி இருப்பவரின்
சுடுசரம் இவைகள்!
விமரிசனம் இவைகள்!!
எரிசரம் இவைகள்!!

ஈழநாடு 09.03.86

# பணம்

என்னுடனே நீ
இருக்கும் வரையும்
என்னை எல்லோருக்கும்
நன்கு தெரிந்தது!
எல்லாருமென்னையே
நாடி வந்தார்கள்!
எனக்கோ எவரையும்
தெரியவில்லை!




என்னை விட்டு நீ
பிரிந்த பின்னாலே
எவருக்கும் என்னைத்
தெரியவே இல்லை!
எல்லாரையும் எனக்கு
நன்கு தெரிந்தது!
உனது சக்தியையும்
உணர்ந்துகொண்டேன்!

**வீரகேசரி 16.03.86**

# வானத்தை நோக்கி........

உன்னைப் பார்க்கின்றோம்!
உண்மைதான் - ஆயினும்
பார்க்கும் பார்வையும்
அர்த்தமும் ஒன்றா?

"உயிர்களைக் காக்கும்
பயிர்களை வளர்க்கும்
மழை வாராதோ?" என
நேற்றுவரையிலும்
ஆர்வத்துடன் நாம்
உன்னைப் பார்த்தோம்"



"உயிர்களைக் குடிக்கும்

குண்டுகள் பொழியும்
விமானம் வருமோ?" என்ற
அச்சத்துடன் உன்னை
இன்று பார்க்கின்றோம்!

உன்னைப் பார்க்கிறோம்!
உண்மை என்றாலும்
பார்க்கும் பார்வையும்
நோக்கமும் வேறுதான்!!

**ஈழநாடு 06.04.86**

# மறந்ததேன்?

நன்றி மறந்ததேன்?
அன்றே மறந்ததேன்?
அங்கும் இங்கும்
பறந்து தேடித்
தாம்சேர்த்த தேனை
எடுக்க முனைந்தவரைத்
தடுக்கத் துணிந்த
தேனீக்களைத்
தேனெடுக்க முனைந்தவர்
நசுக்கிக் கொன்றார்!
தாயின் முலையை
முட்டி முட்டிப்
பால் சுரக்குச்செய்த
கன்று பால் குடிக்க
முயன்ற போது
பால் கறந்தவர்
கன்றின் முகத்தில்
அடித்துவிரட்டினார்!
நன்றி மறப்பதோ?
நன்கு மறப்பதோ?

**வீரகேசரி 18.05.86**





# நாம் யார்

நாம் யாரென்பதனை
யார்தான் அறிவாரோ!
யார்தான் அறிந்தாலும்
நாமே அறிவோமோ!

போதனைகள் செய்வதிலே
சாதனைகள் செய்பவர்நாம்!
சாதனைகள் செய்துமென்ன!
வேதனைகள் கொள்பவர் நாம்!

சீர்வரிசை பெறும் திறமை
சீராகப் பெற்றவர் நாம்!
சீராகப் பெற்றதனால்
சீரழிந்து நிற்பவர்நாம்?

தாழ்வுயர்வு பார்ப்பதிலே
மிகவுயர்ந்து நிற்பவர்நாம்!
மிகவுயர்ந்து நிற்பதனால்
மிகத்தாழ்ந்து போனவர் நாம்!

அயலவனைக் கெடுப்பதற்கு
இன்னுயிரைக் கொடுப்பவர்
நாம்!
இன்னுயிரைக் கொடுத்து
விட்டுப்
பின்னுணர்ந்து தவிப்பவர் நாம்!

அடுத்தவரின் நீதியினை
எதிர்பார்த்து நிற்பவர் நாம்!
அடுத்தவர்க்கு நீதியினைப்
புதிராக்கி வைப்பவர்நாம்!

பழம்பெருமை சொல்வதிலே
களங்கள்பல வென்றவர்நாம்!
களங்கள் பல வென்றுமென்ன?
நலங்கள் பல இழந்தவர்நாம்!

ஒற்றுமை பேசுவதில்
ஒப்புவமை அற்றவர்நாம்!
ஒப்புவமை அற்றதனால்
செப்புமுரிமை விட்டவா நாம்!!

அரங்கேறி முழங்குவதில்
திறமை பெற்றுத் திகழ்பவர்
நாம்!
திறமையுடன் திகழ்ந்து மென்ன
இறைமையற்று உழல்பவர் நாம்!

அடுத்தவரின் செயல்களிலே
பிழைசொல்ல வல்லவர் நாம்!
பிழைசொல்லும் வல்லமையால்
தழைக்கும் வழிமறந்தவர்நாம்!

முரண்பட்டு வாழ்வதற்கே
வரம்பெற்று வந்தவர் நாம்!
வரம்பெற்று வந்ததனால்
அரண் அற்றுத் தாழ்ந்தவர்நாம்!!

குறைகளினைச் சொல்லி
யென்ன ?
குறைநிறையப் பெற்றவர்நாம்!
குறை நிறையப் பெற்றதனால்
நிறைகுறையப் பெற்றவர் நாம்!

ஈழநாடு 20.07.86



# அட்டை

புத்தகத்தினைப்
பாதுகாக்கவும்
வாசகர்களுக்கு
அறிமுகம் செய்யவும்
புத்தகத்துக்கு
அழகு சேர்க்கவும்
இடப்படுவது
ஓர்வகை அட்டை!

மலையகத் தோட்டங்களில்
உழைப்பவர்களுடைய
உதிரத்தைக் குடித்தே
வாழ்கிறதோர் அட்டை!!

மழைகாலத்திலே
எங்கள் ஊர்களில்
அழுக்கில் பிறந்து
அழுக்கையே உண்டு
வீட்டினில் வீதியில்
ஊர்ந்து செல்வதும்
ஓரின அட்டை!

மூச்சைப் பிடித்து
கடலில் மூழ்கிப்
பிடித்து வந்து
கடையில் கொடுத்தால்
பெரும் பணம் வரும்
அதுவும் ஒருவகை
அட்டையே!

சட்டம் வந்தெமைத்
தட்டும் போது
நாம் யாரென்பதை
அடையாளம் காட்டிடத்
துயிலும் போதினில்
பயிலும் போதினில்
உலவும் வேளையில்
குலவும் வேளையில்
வீதியில் போகையில்
வீட்டில் இருக்கையில்
என்றும் எந்நேரமும்
எம்முடன் கூடவே
இருந்திட வேண்டும்
அதுவும் ஓர் அட்டை!

அட்டை இனங்களில்
அறிந்ததைச் சொன்னேன்!
அட்டை இனங்களை
நீங்களும் அறிவீர்!!

**ஈழமுரசு 09.11.86**

# முது மொழி பிழைத்தது

"தனித் தனியிருந்து
பயனேதும் இல்லை;
ஒன்றுபட்டு நாம்
உயர்வடைவோம் " எனத்
துணிந்து கொண்டு
இணைந்து கொண்டோம்"-
"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"
என்ற முதுமொழி கேட்டதும் -
தென்னை ஈர்க்குகள் நாம்!

உயர்நிலை பெறவே
இனைந்த எமக்குத்
"துடைப்பம்" என்னும்
பெயரைச் சூட்டினர்!
வீட்டில் நிறையும்
குப்பைகள் பெருக்கிடும்
பணியை எமக்குப்
பணியாய்ப் பணித்தனர்!
தினம் தினம் காலையில்
அவர் விழித்தெழுமுன்
துடைப்பமாய் எங்கள்
கடமையை முடித்து
எவரது கண்ணுக்கும்
எட்டாத மூலையில்
ஒதுக்கிட வேண்டும்
என்றும் பணித்தனர்!
ஏனென்றால் - நாம்
அவர்களின் கண்களில்
தெரிந்தால் அவர்க்குச்
சகுனப் பிழையாம்!மறந்தும்
உடம்பில்பட்டு விட்டாலும்



அவர்க்கு அதுபெரும்
மதிப்புக் குறைவாம்!
அடித்து விட்டாலோ!
அது பெரும் கறையாம்!

தாழ்வேதுமில்லாது
தனித்தனி இருந்தோம்!
உயர்நிலை பெற எண்ணி
இணைந்து கொண்டோம்;
ஒற்றுமைப் பட்டோம்!
ஒதுக்கப்பட்டோம்!
எங்கள் வாழ்வில்
முதுமொழி பிழைத்தது!!

ஈழநாடு 09.11.86

# மீண்டும் வருக!



தராசின் ஒரு தட்டில்
புறாவை வைத்து
மறு தட்டில்
தாங்கள் அமர்ந்து
புறாவைக் காத்த
சிபிச்சக்கரவர்த்தியே!
இங்கே மட்டுமல்ல
எங்கேயும் தான் -
புறாவை கொடுத்துத்
தம்மைக் காப்பவரல்லாது
தம்மைக் கொடுத்துப்
புறாவைக் காப்பவர்
யாருமில்லை ! -
ஆதலின்
உயிர் ஊசலாடும்
சமாதானப் புறாவின்
உயிரைக் காத்திடத்
தாங்களே மீண்டும்
இங்கே இருப்போதே -
மீண்டுமொரு முறை
வருதல் வேண்டும்!!

**வாரமுரசொலி 21.12.86**

கையில் கிடைத்த அப்பத்தை
வந்திருந்த
பல்லாயிரவருக்கும் பகிர்ந்து
கொடுத்துப் பசிபோக்கிய
யேசுபிரனே!
உரிமைகள் அப்பத்தை
இங்கே வாழும்
அனைவரும் பெற்றிடப்
பகிர்ந்து கொடுத்து
உரிமைப்பசி போக்க
வழி அறியாது
இங்கே உள்ளோர்
அவதியுறுகின்றார்!
அப்பம் பகிர்ந்து
அற்புதம் நிகழ்த்திய
தாங்களே இங்கே
உடனே வருகை தந்து
எல்லோருக்கும்
உரிமைகளப்பம் கிடைத்திட -
உரிமைப்பசி தீர்த்திட -
பகிர்ந்து தாருங்கள்
பரமபிதாவே!
விரைந்து வாருங்கள்!
முன்னர் வந்தீர்கள்!
எங்கள் நன்றிகள்!
வேண்டுகின்றோம்!
மீண்டும் வாருங்கள்

# எழுத்தில் திருத்தம்

பாடசாலையில் என்
தோழர்களுடனே
நிலத்தில் என்னையும்
அமரச்செய்து
என் முன்பாக
வெண் மணல் பரப்பிச்
சின்னஞ் சிறிய என்
வலக்கைச் சுட்டு
விரலைப் பிடித்து
'ஆனா' எழுதப்
பழக்கிய ரீச்சர் -
"அப்படி அல்லவே;
இப்படி எழுதும்;
சொல்லிச் சொல்லி
எழுத வேண்டும்
இன்னும் வடிவாய்
எழுதவேண்டும்" எனச்
சொல்லியதே என்
எழுத்திற்கான
முதன் முதற் திருத்தம்!

படித்த பாடசாலையில்
ஒவ்வொரு தவணைப்
பரீட்சையின் முடிவிலும்
தரப்படுகின்ற
தேர்ச்சி அறிக்கைகளில்
" கை எழுத்தின்னமும்
திருத்த வேண்டும் " என
வகுப்பாசிரியர்களின்
விசேட குறிப்புகள் -
எனது எழுத்திற்கு
இரண்டாம் திருத்தம்!

தேர்தல் காலங்களில்
வீதியோரங்களிலுள்ள
மதில்களின் மீது
யாரும் காணா நேரம் பார்த்து
"............ வாழ்க" என நான்
எழுதிச் சென்றதை
மறுநாள் பார்க்கையில்
" வீழ்க" என்றாக்கியும் -
"....... வீழ்க" என நான்
எழுதிச்சென்றதை
" வாழ்க" என மாற்றியும் -
".....ஒழிக" என நான்
எழுதிய எழுத்தை
"ஒளிர்க" எனத்திருத்தியும் -
இருப்பதைக் கண்ணால்
கண்டிருக்கின்றேன்!
மூன்றாம் திருத்தம்
இது என் எழுத்திற்கு!!

இரவு பகலாய்
மூளை சலித்திடக்
கைகள் தளர்ந்திடப்
படைத்த படைப்பினைப்
பத்திரிகை ஆசிரியருக்கு
ஆசையோடு அனுப்பி
வைத்திட



" பிரசுரத்துக்கிதனை
ஏற்றிட இயலாது;
உயிரும் உறுதியும்
எழுத்தில் வேண்டும்"
என்னும் குறிப்புடன் -
சுவரில் எறிந்த
பந்தினைப் போலென்
படைப்பு என்கைக்கு
வருவது உண்டு!
அவை என் எழுத்தில்
நாலாம் கட்டத்
திருத்தமென்பேன்!!

0-0

எனதெழுத்துக்களும்
அவைகளுக்கேற்படும்
திருத்தங்களும் தான்
இப்படிப் பலவிதம்!
எனது எழுத்தைத்
திருத்தும் இவர்களில்
என்தலை எழுத்தைத்
திருத்தவல்லார் யார்?

ஈழநாடு 04.01.87

0-0

# அந்நோரின் பசி போக்க வேண்டும்!!



என் வாழ்வில் வழிகாட்ட வேண்டும் - இறைவா
நீயென்றும் துணை நிற்க வேண்டும்
எனைச் சூழும் துயர்நீக்க வேண்டும் - உலகில்
என்வாழ்வை உயர்வாக்க வேண்டும்

நான் வாழ மனையொன்று வேண்டும் - என்றன்
துணையோடு அதில்வாழ வேண்டும்
நான் வாழப் பொருள்பண்டம் வேண்டும் - எதுவும்
இலையென்ற நிலைநீங்க வேண்டும்.

கிடைக்கின்ற பொருள் பண்டம் கொண்டு - எதுவும்
அற்றோரின் பசி தீர்க்க வேண்டும்
படைக்கின்ற உணவுண்ணும் அவரின் - உள்ளம்
மலர்கின்ற முகம் காண வேண்டும்

நலிந்தோரின் துயர்தீர்க்க வேண்டும் - அவரின்
இருள்வாழ்வில் ஒளியூட்ட வேண்டும்
நலிந்தோரின் வளமோங்கக் கண்டு - நெஞ்சம்
மகிழ்ந்தாட அருள்கூட்ட வேண்டும்

தமிழ் போற்றும் கவியாக வேண்டும் - என்றன்
தமிழ்ப்பாக்கள் புதிதாக வேண்டும்
தமிழ்கூட்டும் சுவையாவும் வேண்டும் - அந்தத்
தமிழ்ப் பாக்கள் புவியாள வேண்டும்

என்தேவை எவை யென்பதறியேன் - உள்ளம்
தூண்டும்போ திவையாவும் கேட்டேன்
என்தேவை எவையென்ப தறிவாய் - இறைவா
என்தேவை அவையாவும் அருள்வாய்

**வார முரசொலி 11.01.87**

## ஓ......நட்சத்திரங்களே!



நறுமலர்கள்
இணையும் போது
மாலையென்றவை
பெயர் பெறும்!
மதிப்பும் உயரும்!!

ஒருசத நாணயங்கள்
நூறு ஒன்றாகச்
சேர்ந்தால் போதும் -
ஒருரூபாய் எனப்
பெயரும் மாறிப்
பெறுமதி உயரும்!

மண்ணில் விழுகின்ற
மழைத்துளிகள்
சேர்ந்து கொண்டு
'வெள்ளம்' என்று
மிரட்டுகின்றன!
ஆறு குளங்களில்
நிறைந்து நின்றவை
பயன்தருகின்றன!!
பலவகை மரங்கள்
கூட்டமாக நின்றால்
'காடு' என்பர்!
பூஞ்செடி, கொடிகள்
ஒருங்கே வளர்ந்தால்
'பூஞ்சோலை' என்பர்!!
சொற்கள் கூட
அர்த்தமுடன் இணைந்து
இசையுடனும் கலந்து
பாடலென்ற பெயருடன்
எமக்குச் சுகம் தருகின்றன!

ஆனால் - வானில் மின்னும்
நட்சத்திரங்களே!
உங்களில் நூற்றுவரல்ல -
ஓராயிரவர்
இணைந்து கொண்டாலும்
உங்கள் பெயர்
" சந்திரன் " ஆகுமா?
என்றென்றும் நீங்கள்
நட்சத்திரங்களே!

**ஈழநாடு 25.01.8**

# புகை

புகையில் உள்ளன
பலவகை - நான்
எடுத்துரைப்பேன்
சில வகை!

வீதியில் ஊர்திகள்
விடும் புகை - அது
வேகத்தைக் காட்டிடும்
கரும் புகை!!

அடுப்பினில் இருந்து
எழும் புகை - கொடும்
பசியினைப் போக்கிட
வரும் புகை!

தொழிலகங்களில்
படர்புகை - நாட்டின்
வளர்ச்சியைக் காட்டிடத்
தொடர் புகை!!

வாயினில் சுழலுமே
சுருட்டின் புகை - மனித
உடல் நலத்தினை
மிரட்டும் புகை!

போர்க்களத்தினில்
சீறும் புகை - நன்கு
முற்றிய பகைமையைக்
கூறும் புகை!!



சுடு காட்டினிலே
பரவும் புகை - புவி
வாழ்வின் முடிவினைப்
பகரும் புகை!


அயலவன் சிரிப்பினைப்
பார்த்தால் புகை - கொடும்
பொறாமை நெஞ்சத்தின்
சீற்றப் புகை!!

இல்லாதான் வயிற்றில்
புகையும் புகை - அது
அநீதியை அழித்திட
முனையும் புகை!

புகைகளில் இப்படிப்
பல வகை - அதில்
இங்கு நான் சொன்னது
சில வகை!!

**ஈழநாடு 08.03.87**

# சரிபிழை புரியும்



எம்மவர் செயலில்
என்ன தவறு?
புராணத்தைப் புரட்டினால்
புரியுமிது சரியென்று !!

" சீதையை விட்டு
ராமபிரானுடன்
சமரசம் செய்"
என்று நல்லவர் யாவரும்
சொன்னார் - ஆயினும்
நல்லறிவுரையை
இராவணேஸ்வரன்
அலட்சியம் செய்தான்!
இறுதியில் மண்ணில்
நீதியைக் காத்திட
நடத்தது.....................!

வானவர் குலத்தைச்
சூரன் வருத்தினான்!
வானவர் நாட்டையும்
பறித்தெடுத்தான் !
" பறித்த நாட்டை
திருப்பிக்கொடு !
உரிமையுடன் அவர்களை
வாழவிடு"என்று
சூரனிடம் சொல்லியும்
அவன் கேட்டானா?
வானவர் வாழ்வை
வானவர் நாட்டை மீட்டெடுக்க
முடிவினில் நடந்து முடிந்தது......!!

"பாண்டவர்களுக்கு
உரியதைக் கொடு"என
நீதி யுணர்ந்தோர்
நீதியைச் சொல்லினர்!
அரவக் கொடியோன்
எதையும் கேட்டிலன்!!
கண்ணன் கூடத்
தூது சென்று
' ஐந்து இல்லமேனும்
அவர்க்குக் கொடு" -
எனக் கூறியும் எதையும்
நூற்றுவர் தலைவன்
ஏற்றிடவில்லை!
இழந்த உரிமையை
மீட்டெடுக்க
இறுதியில் மண்ணில்
என்ன நடந்தது!!
எப்படி முடிந்தது!!

எல்லா வழியிலும்
முயன்று பார்த்தார்!!
வழிகளெல்லாம்
வழுவிப் போயின !!
என்ன செய்வது?
எம்மவர் நிலையிது!
புராணத்தைப்புரட்டினால்
புரியும் சரிபிழை!!

ஈழநாடு 01.02.87

# மீன் தந்த துணிவு



வாழ்க்கைப் பாதையில்
தினம் தினம் என்னை
வருத்தி வதைக்கும்
துயர்கள் நிறைந்த
நெஞ்சுடன் அன்றும்
ஆற்றோரத்தில்
அமைதி தேடி
அமர்ந்திருந்தேன் நான்!
வெள்ளிக் காசென
மின்னும் மீன்களின்
கூட்டமொன்று
சீறிப்பாய்கின்ற
ஆற்றின் நீரை எதிர்த்து ஓடும்
எழிலைக் கண்டேன்!
என்னுள் வியந்தேன்!!
எதிர்த்து ஓடும் மீன் கூட்டத்தை
மீண்டும் பார்த்தேன்!
என்னை வதைக்கும்
துயர்களை எதிர்த்து -
துயர்களை வதைத்து -
வாழ்க்கையை வெல்லும்
நெஞ்சத் துணிவை
வெள்ளி மீன்கள்
அள்ளித் தந்தன!!
துணிந்த நெஞ்சுடன்
எழுந்து நடந்தேன்!!

ஈழநாடு 15.02.87

# தொல்லையை வளர்க்கும் ஆசை!


ஆசைகள் இன்றி மண்மேல்
யாருமே பிறப்பதில்லை!
ஆசைகள் இன்றேல் மண்மேல்
யாருமே பிறப்பதில்லை"

அளவுடன் ஆசை கொண்டால்
தொல்லைகள் ஏதும் இல்லை!
அளவிலா ஆசை கொண்டால்
தொல்லைக்கு எல்லை இல்லை!!

அளவிலா ஆசை தோன்றின்
குறுகிய வழிய்யை நாடும் !
குறுகிய வழியை நாடத்
தொல்லையும் தொடர்ந்து சேரும்!!

தொல்லைகள் தொடரும் போது
தொல்லையை வெல்ல எண்ணித்
தொல்லைகள் நிறையும் அந்த
குறுகிய வழியே செல்வார்!!

தொல்லையை வெல்ல மீண்டும்
தொல்லையுள் மாட்டிக் கொள்வார்!
தொல்லையை வளர்க்கும் ஆசை!!
ஆசையை வளர்க்கும் தொல்லை!



கிடைப்பது போதும் என்னும்
உள்ளமே ஆசைக் கெல்லை!
கிடைப்பது போதா தென்று
சொல்வதே ஆசைத் தொல்லை!!

தகுதியைக் கருத்திற் கொண்டு
ஆசைகள் அமைந்தால் இன்பம்!
தகுதியை மறந்து கொண்டு
ஆசைகள் வளர்ந்தால் துன்பம்!!

கால்களுக் களவாய்ச் செருப்பு
அணிவதே அழகைச் சேர்க்கும்!
கால்களைச் செருப்புக் கேற்ப
மாற்றினால் விளையும் தொல்லை!!

ஆசையின் எல்லை சொல்லும்
ஆசையின் தொல்லை சொல்லும்
ஆசையில் பாக்கள் தந்தேன்!
ஆசையாய்ப் பாடிப் பார்ப்பீர்!!

**வாரமுரசொலி 01.03.87**

# ..........தளரும் போது?

மொட்டுகள் தளரும் போது
நறுமலர் அசைந்து ஆடும்!
கட்டுகள் தளரும் போது
உறுதியும் குலைந்து போகும்!!

வண்ணங்கள் தளரும் போதில்
காட்சியின் சுவைகள் சோரும்!
எண்ணங்கள் தளரும் போதில்
வாழ்க்கையின் சுவையும் சோரும்!!



ஆவல்கள் தளரக் கண்டால்
அவலங்கள் மறைந்து கொள்ளும்!
காவல்கள் தளரக் கண்டால்
களவுகள் நுழைந்து கொள்ளும்!!

சட்டங்கள் தளரும் போழ்து
குற்றங்கள் அதிகமாகும்!
திட்டங்கள் தளரும் போழ்து
நட்டங்கள் அதிகமாகும்!!

ஒற்றுமை தளரும் பொழுது
பகைமையே வளரப் பார்க்கும்!
நற்றுணை தளரும் பொழுது
அச்சமே படரப் பார்க்கும்!!

அன்பது தளரும் போதில்
துன்பங்கள் உதயமாகும்!
பண்பது தளரும் போதில்
பழிகளும் உதயமாகும்!!

சாதிகள் தளரக் கண்டால்
சமத்துவம் வளரும் மெல்ல!
நீதிகள் தளரக் கண்டால்
பீதிகள் வளரும் மெல்ல!!

இலட்சியம் தளரும் பொழுதில்
வழிகளும் மாறிப்போகும்!
இலக்குகள் தளரும் பொழுதில்
இழப்புக்கள் கூடிப் போகும்!!

உத்திகள் தளரும் வேளை
சித்திகள் நழுவும் மெல்ல!
சக்திகள் தளரும் வேளை
பக்தியும் வளரும் மெல்ல!!

பத்தியம் தளரக் கண்டால்
நோயது உடலில் வாழும்!
சத்தியம் தளரக் கண்டால்
துயர்களே என்றும் ஆளும்!!

தானங்கள் தளரும் போது
ஈனங்கள் கிளரும் மெல்ல !
ஞானங்கள் தளரும் போது
ஊனங்கள் வளரும் மெல்ல!

சொத்துக்கள் தளரும் காலை
உறவுகள் மெல்லப் போகும்!
பற்றுக்கள் தளரும் காலை
துறவங்கு மெல்லாச் சேரும்!!

**வார முரசொலி 05.04.87**



# என்னென்று நான் சொல்வேன்.....?

அதிகாலையிலே நீ
எம்துயில் நீங்கிடப்
பள்ளி எழுச்சி
பாடிடும் 'பாடகன்' !

வரும் விருந்தினரை
வீட்டுக்குக் வீடு
பறந்து பறந்து
முன்னரே சொல்லும்
நீயொரு 'தூதுவன்'!

உணவு உண்ணாது
அழும் குழந்தைக்கு
வேடிக்கை காட்டிடும்
'கோமாளி' நீயே!

குயில் குலத்தினது
பிரசவவேதனையில்
பாதியை ஏற்றுத்
துயர்ப்படும் நீயொரு
'புதுமைத்தாய்'!

உனக்கு- அவர்
எவராயினும் சரி
அயர்ந்து நிற்பவர்
கைகளில் இருக்கும்
உணவுப் பொருளினைத்
தட்டிப் பறித்திடும்
'தந்திரக்காரன் ' நீ!

உன்னினத்தில் யாரும்
இறந்து கிடந்தால்
இனத்தைக் கூட்டிக்
கரையும் வேளையில்
நீயொரு ' மானிடன்,!



உணவைக் கண்டதும்
உறவைக் கூட்டிப்
பகிர்ந்து உண்ணும்
பண்பில் நீ ' காக்கை'!

மரங்களிற் பழுத்த
பழங்களை அறிந்து
எமக்கு உணர்த்தும் நீ
'தோட்டக்காரன்'!

காலத்திற்குக் காலம் உன்
பிரசவத்திற்கு முன்
புதுக்கூ /வீடு கட்டும்
நீயொரு 'உழைப்பாளி'!

பகல் முழுவதும உன்
உணவு தேடி
உண்டு களைத்தும்
மாலையில் குளித்தே
மனைபுகும் நீ '
ஆசாரசீலன்'!

ஈழநாடு 19.04.87

# குளத்துநீர் உள்ளவரை.........!



குளத்தில் தண்ணீர்
இருக்கும் வரையில்
குளமுனக்கு உறவென்றாய்!
குளத்தில் தண்ணீர்
குறைந்தவுடனே
போவதெங்கே கொக்கக்கா?

தண்ணீர் நிறைந்த
குளத்தைத் தேடிப்
போகிறேன் நான் என்தம்பி!
தண்ணீர் இல்லாக்
குளத்துடன் நான்
இருந்து மென்ன பயன்தம்பி?

உன்னைப் போல
எண்ணும் மனிதர்
எம்மிடத்தும் இருக்கின்றார்!
உன்தன் செயலில்
பிழை எதையும்
சொல்லமாட்டேன்
கொக்காக்கா!!

என்னைப் போல
எண்ணும் மனிதர்
இருப்பதாகச் சொல்கின்றாய்!
எனக்குச் சற்றே
விளங்கும் வகையில்
கதையைச் சொல்லு
என் தம்பி!!

பணம் இருக்கும்
வரையில் மனிதர்
உறவுசொல்லி வாழுவார்!
பணம் குறையக்
கண்டு கொண்டால்
உறவை மறந்து ஓடுவார்!

வரண்ட குளத்தில்
தொடர்ந்திருந்தால்
நானிறப்பேன் என்தம்பி!
பலன் இன்றேல்
விலகிப் போதல்
உலகின் தர்மம் அறிதம்பி!

நன்றி மறந்துயிர்
வாழ்வதைக் கண்டு
நாடு சிரிக்குமே
கொக்காக்கா!!
இன்பத்தில் இணைவதும்
துன்பத்தில் பிரிவதும்
பண்பாளர் செயலோ
கொக்கக்கா?

**ஈழநாடு 26.04.87**

# மௌனம்

மௌனமே!
உனக்கு அர்த்தங்கள்
பலப்பல உள்ளன!
" சர்வார்த்தசாதனம்"
என்பதும் உன்பெயர்!
எப்படி என்று தானே
என்னைக் கேட்கிறாய்?

சுமத்தும் குற்றம்
சுத்தமானதெனில்
குற்றம் சுமப்பவன்
நாடுவதுனையே!

சுமத்தும் குற்றம்
பொய்யென்றாலும் -
விளக்கம் தருவதால்
நல்விளைவெதுவும்
விளையாதென்பதை
உணர்ந்து கொண்டால் -
நிர்க்கதியான
நிரபராதிக்கும்
நீயே தஞ்சம்!

வாதங்களுடனே
பிரதிவாதங்கள்
முட்டிமோதி
மோதல் தோன்றும்
நிலைவந்து விட்டால்
இரு தரப்பாரின்
ஒரு தரப்பாரிடம்
நீ குடி கொண்டால் -
எவ்வித நிலைமையும்
சமநிலையடையுமே!

சொல்லம்புகளால்
ஒருவன் சாட -
சாடப்படுபவனுக்கு
உன் துணையிருந்தால்
சாடுபவன் உடனேயே
முட்டாளாகின்றான்!

சிரிப்புக் கதையினைச்
சொல்லுவதாக எண்ணிக்
கழுத்தை அறுப்பவர்
கதை சொல்லி
முடிக்கும் போது -
கதைகேட்டவர்களுடன்
நீ கலந்திருந்தால்
கதை சொன்னவரது
அழகு முகத்தில்
அசடு வழியுமே!

திருமணத்துக்குச்
சம்மதம் கூறிட
"நாணம்" என்பதைக்
குறைவறப் பெற்ற
கன்னியருக்கும்
வேண்டும் மொழி
உன்மொழிதானே!

பலர் முன்னிலையில்
புகழப்பெறுபவர்
புகழுக்குரியவர் -
அடக்கமுடையவரெனின்
உன்னைத்தானவர்
பற்றிக் கொள்வார்!

முற்றும் துறந்த
துறவிகள் ஞானிகள்
கற்றுத் தெளிந்த
அறிஞர்கள் மேதைகள்
உன்னுறவைத்தான்
பெரிதும் போற்றுவர்!

சிற்சில வேளையில்
சிற்சில இடங்களில்
சிற்சில விடயத்தை
அறியாதவர்களும்
தம்மறியாமையை
அடுத்தவர்கள்
அறியாதிருக்க
நீ துணை செல்வதுண்டு!

பேசிப் பேசிப் பெற்றது
என்ன?
பேசப்பேசச் சக்திதான்
குறையும்!
ஆதலின் - மக்கள்
உன் கை பிடித்தால்
சக்தியேனும் மிச்சமாகுமே!

உண்மையில் நீயொரு
சர்வார்த்தசாதனமே!
இப்பொழுதாகிலும்
இதனை ஏற்றிடு
மௌனம் ஏனே?
சம்மதம் தானே!!



**சஞ்சீவி 27.06.87**



# மாலை

மாலை வகைகள்
மலைபோல் உண்டு!

காலை வளர்ந்து
நண்பகல் முதிர்ந்ததின்
பின்னால் வருவது
மயக்கும் மாலை!

வாழ்வைத் தொடங்கும்
மணமக்கள் கழுத்தில் -
வாழ்த்துப் பெறுகின்ற -
நல்லவர் கழுத்தில்
கிடந்து புரளும்
மலர் மாலை!!

செயற்கரிதான
செயல் செய்தவர்க்குப்
பரிசாகக் கிடைப்பது
புகழ் மாலை!!

செய்யத் தகாததைச்
செய்தவருக்கு
வெறுப்புடன் சூட்டுவர்
வசைமாலை!!

பணம் படைத்தவன் தன்
பணபலம் காட்டிடக்
கழுத்தில் புரளும்
பொன்மாலை!

இறைவனைப் பணிந்து
அவனருள் இரந்து
சூட்டும் மாலை
பாமாலை!!

இசைவாணர் கூடும்
அரங்குகளிலே
மலரும் மாலை
இசைமாலை!

கலந்து வளர்ந்த
காதல் முறிந்து
கவலையில் மூழ்கும்
கன்னியின் கண்களில்-
தலைவனைக் பிரிந்த
தொண்டனின் கண்களில்-
நண்பனை இழந்த
நண்பனின் கண்களில்
வீழும் மாலையோ
கண்ணீர்மாலை!!

தேர்தலில் நிற்கும்
வேட்பாளருக்கும்
நாளைய நன்மையை
நினைவில் கொண்டு
சூட்டும் மாலை
பணமாலை!

ஈழநாடு 19.07.87

# கண்ணீர்

மகிழ்ச்சியின்
உச்சியிலிருக்கும் போது -
துன்பத்தின் முடியைத்
தொடுக்கின்ற போது-
விழிகளிலிருந்து
வீழ்வது நீயே!

இறைவனிடத்தில்
இரக்கின்றவேளை -
ஆற்றாமையினை
உணர்கின்ற வேளை -
கண்களில் தூசு
உறுத்தும் வேளை -
கண்களிரண்டின்
கரைகளை உடைப்பாய்!!

ஆட்சிகளை மாற்றும்
அபார சக்தி
சாம்ராஜ்யங்களைச்
சாய்க்கும் சக்தி
உனக்குண்டென்று
காவியங்களையும்
சரித்திரங்களையும்
படித்தறிந்துள்ளோம்!



ஆண்களின் கண்ணீரை
'ஆனந்தம்' துன்பம்'
'ஆற்றாமை' என்று
வகுக்கும் சமூகம்
பெண்களின் கண்ணீரை
'மாய்மாலம்' 'காரியம்' என
வகுப்பது ஏனோ?

சிற்சில பெண்கள்
தாம் முயன்றும்
சாதிக்க இயலாக்
காரியத்தைச் சாதிக்க
உதவும் இறுதி
ஆயுதம் நீ!

உன்னை அளப்பது
மிகவும் கடினம்!
ஏனெனில் - உன்னில்
போலிகள் உண்டு!
நிஜங்களும் உண்டு!
காரணத்தோடும்
கண்களில் புரள்வாய்!!
காரணமின்றியும் கண்களில்
திரள்வாய்!!

**ஈழநாடு 27.09.87**

## பூ........பூ........பூ.......

உழைத்து உண்டு
உவந்து வாழ்ந்திடும்
நிலத்தை மக்கள்
"பூ" என்பார்!



குளத்திலும் மரத்திலும்
செடியிலும் கொடியிலும்
மலரும் மலரையும்
"பூ" என்பார்!!

கசக்கும் மருந்தைப்
பருகிய பையனின்
வாயில் நெளிவதும்
"பூ.........பூ.........பூ..."

எரிக்கும் வெய்யிலில்
நடந்து களைத்து
மரத்தின் நிழலில்
ஒதுங்கி நிற்பவர்
வாயில் நிறைவது
"பூ.........பூ.........பூ..."!!

பலூனை ஊதும்
பையனின் வாயிலும்
அடுப்பை ஊதும்
அன்னையின் வாயிலும்
பிறந்து வருவதும்
"பூ.........பூ.........பூ..."!!

பூவைப் பற்றியென்
கவிதையைப் படித்த
உங்கள் வாயிலும்
எழுதிய என்னை
ஏளனம் செய்திட
மலர்ந்து மறைவதோர்
"பூ..." தானே!!

**வீரகேசரி 21.02.88**

## எத்தனையோ கோடி இன்பம்!



எண்ணில்லா இன்பங்களைப்
பாரினிலே பார்க்கின்றேன்!
எண்ணத்தில் வருபவற்றைப்
பாட்டிசைத்தல் எனக்கின்பம்!

அயலவனின் துன்பத்தில்
இன்புறுவார் இங்குள்ளார்!
அயலவனின் இன்பத்தில்
இன்புறவும் இங்குள்ளார்.!

எளியவரை வருத்துவதே
பொல்லார்க்குப் பேரின்பம்!
எளியாரை உயர்த்துவதே
நல்லாக்குப் பேரின்பம் !

மற்றவரின் உரிமைகளை
மறுப்பதின்பம் சிலபேர்க்கு!
மற்றவரைத் தம்மைப்போல்
மதிப்பதின்பம் சிலபேர்க்கு!

தம்பலத்தைக் காட்டுவதில்
சிலரின்பம் காணுகின்றார்!
தம்நலத்தைக் காப்பதில் தான்
சிலரின்பம் பேணுகின்றார்!

பிறர்க்குதவி செயவதிலே
சிலரின்பம் பெறுகின்றார்!
பிறர்க்குதவி மறுப்பதிலும்
சிலரின்பம் பெறுகின்றார்!

தம்முடலை வளைத்துழைத்து !
உண்பதிலே சிலர்க்கின்பம்
பிறருழைப்பைப் பறித்தெடுத்து
உண்பதிலும் சிலர்க்கின்பம்!

கள்ளினிலே நிறைவதனைக்
காண்பதுவோர் இன்பமென்பார்!
கல்லினிலே இறையதனைக்
காண்பதுமோர் இன்பமென்பர்.!

பகட்டின்றி வாழ்வதில் தான்
பேரின்பம் சிலபேர்க்கு!
பகட்டாக வாழ்வதிலோர்
பேரின்பம் சிலபேர்க்கு!

பணம் பணமாய்க் குவிப்பதிலே
சிலபேர்க்குப் பெருமின்பம்!
பணம் மனமாய்க் கொடுப்பதிலே
சிலபேர்க்குப் பெருமின்பம்.!

மண்ணாள்வ தின்பமென்பார்
பொன்னாள்வ தின்பமென்பார்!
பெண்ணாள்வ தின்பமென்பார்
போராள்வ தின்பமென்பார்!

அழகினிலே சிலர்க்கின்பம்
கலகத்திலே சிலர்க்கின்பம்!
அழுவதிலே சிலர்க்கின்பம்
அவலத்திலே சிலர்க்கின்பம்!

தம்மைத்தாம் புகழ்வதிலே!
சிலரின்பம் கொள்ளுகின்றார்
தம்மைப்பிறர் புகழ்வதிலும்
சிலரின்பம் கொள்ளுகின்றார்!

எத்தனையோ கோடி இன்பம்!
இறையருளால் புவிமீது
அத்தனையும் பாடுகின்ற
அறிவுத்திறன் எனக்கேது?

இன்பப்பா படிப்பதனால் !
நீரின்பம் பெற்றிருந்தால்
இன்பப்பா பாடியதால்
எனக்கென்றும் இன்பம்தான்!

**தினகரன் 20.03.88**

## வேகத்தில் மோகம்

எங்களுக் கென்றுமே
வேகத்தில் மோகம்!
எங்களுக் கெதனிலும்
வேகத்தில் தாகம்!!

சைக்கிள் வண்டியின்
இருக்கையில் அமர்ந்து
ஓட்டும் வேகம்
போதாதென்பதால்
எழுந்து நின்றவர்
சைக்கிளை ஓட்டுறார் !

உருண்டு செல்லும்
மாட்டுவண்டியின்
வேகத்தை இன்னமும்
கூட்டிட வேண்டி
வண்டியை இழுக்கும்
மெலிந்த நலிந்த
எருதுகள் இரண்டின்
நெடிய வால்களைப்
பிடித்து இழுத்து
முறுக்கி முறுக்கி
விரட்டுகிறார் ஒருவர்!!



பறக்கும் மினிபஸ்ஸின்
வேகத்தில் உள்ளம்
நிறைவு கொள்ளாத
பயணிகள் சிலபேர்-
" இந்த வேகத்தில்
நத்தை வேகத்தில்
மினி பஸ் போனால்
நாலு சில்லையும்
கறையான் தின்னும்" என
மினிபஸ் சாரதியைக்
கேலி செய்கிறார்!!

ஓடும் ரயிலின் வேகம்
காணாதாம்!
" ரயிலும் ஓடட்டும்;
நாமும் நடப்போம்!
போகும் இடத்துக்கு
விரைவாய் போகலாம்"-
இப்படி நினைத்தவர்
ஓடும், ரயிலில்
தன் இருக்கையை விட்டு
எழுந்து ரயிலுள்
வேகமாய் நடக்கிறார்!

குறுகிய காலத்துள்
படிப்பது எப்படி?
பரீட்சையில் சித்தி
அடைவது எப்படி?
பதவியொன்றையும்
பெறுவது எப்படி
இவைகளை அறிவதில்
இளைஞரின் நாட்டம் !

உண்மை உழைப்பால்
பணத்தைச் சேர்த்திடப்
பொறுமை யற்றவர்
அதிவிரைவாகப்
பணத்தைக் குவித்திடக்
குறுக்கு வழியொன்றை
அறிந்திடத் துடிக்கிறார்!

அதிக விளைச்சலை
அள்ளித் தருகின்ற
குறுகிய காலப்
பயிரினங்களினைத்
தேடித்தேடி
ஓடுகிறார் விவசாயி!

எங்களுக்கிப்படி
வேகத்தில் மோகம்!
எங்களுக் கென்றுமே
வேகத்தில் மோகம்!!

ஈழநாடு **28.02.88**



# பழமொழி ஒன்று

" ஐந்தில் வளையாதது
ஐம்பதில் வளையாது" எனச்
சொன்னவர் யாரோ?
சொன்னதும் சரியோ?

அன்றொரு நாள் நான்
அவசரமான - மிக
அவசியமானதோர்
அலுவலுக்காகவோர்
அலுவலகத்தினுள்
நுழைந்து - அங்கோர்
அலுவலரிடத்து என்
தேவையைச் சொன்னேன்!
சிறிது நேரம் - அவர்
சிந்தனை செய்தார்!
"இது மிகச் சிரமம் -
இன்றிது இயலாது -
நாளை மறுநாள்
வாருங்கள்" என்றார்!
'எனது தேவையை
இன்றே நீங்கள்
நிறைவு செய்து
எனக்கு உதவுங்கள்"
என்றோர் ஐந்து ரூபாத்தாளை
அவரது கையுள்ளே
வைத்தேன் மெதுவாக!
கையை விரித்துப்
பார்த்த அலுவலர்
முகத்தைச் சுழித்தார்!
உதட்டைப் பிதுக்கினார்!
அலுவலருடைய
அகத்தின் அழகை
இல்லை - அவரது
அகத்தின் அளவை
முகத்தில் கண்டேன்!
எனவே - அவரிடமிருந்த
ஐந்து ரூபாவை
இதமாகப் பெற்று
என்னிடமிருந்த
ஐம்பது ரூபாவை
அவரது கையினுள்
புதைத்தேன் மெதுவாக!
கையை விரித்தவர்
சிரித்துக் கொண்டார்!
'!இரண்டு மணிக்கு
தவறாது இங்கே
வாருங்கள்" என்றார்!
அவர் சொற்படி நான்
அலுவலகம் சென்றேன்!
அவசரமான எனதுதேவை
அவரின் உதவியால்
இனிதே நிறைந்தது!

வளையாதென்றது
வளைந்து கொண்டதேன்?
பழமொழியொன்று
பிழையாய் போனதேன்?
பழையது என்பதால்
பிழையாப் போனதோ?

**வாரமுரசொலி 23.04.89**

# காற்றே



ஒளிந்தும் நிறைந்தும்
உலவும் காற்றே
உன்னைத் தேடுகிறேன்!
குறைந்தும் வளர்ந்தும்
குலவும் காற்றே எங்கும்
தேடுகின்றேன்!

-0-

மெல்ல மெல்லத்
தவழ்ந்து வந்து
சுகத்தில் ஆழ்த்துவாய்
சுழன்றடித்து
மரத்தைப் பெயர்த்துப்
பயத்தில் வீழ்த்துவாய்!

மிதக்கும் படகைத்
தள்ளிப் படகின்
விரைவைக் கூட்டுவாய்
அலையை உயர்த்திப்
படகைக் கவிழ்த்துத்
துயரில் ஆழ்த்துவாய்

வேய்ங்குழலில்
நுழைந்து இணைந்து
இசை பொழிந்திடுவாய்!
வாயின் வழியே
அடுப்புள் சென்று
தீயை மூட்டுவாய்!
வட்டப் பந்துள்
நிறைந்து கொண்டு
உதைகள் வாங்குவாய்!
சைக்கிள் சில்லில்
சிக்கிக் கொண்டு உருண்டு
ஓடுவாய்!

பட்டம் ஏற்றும்
பையன் மகிழ
உதவி வழங்குவாய்!
நூலை அறுத்துப்!
பட்டம் பனையில்
தொங்க ஏவுவாய்!

பெயர்கள் பலவும்
பெற்ற உனது
பணிகள் பலவகை!
நன்மை தீமை
இரண்டும் உண்டுன்
பணியின் தனிச்சுவை!

எங்குமுள்ளாய்!
எதிலுமுள்ளாய்
இறைவன் நீயப்பா!
ஆக்க வல்லாய்!
அழிக்கவல்லாய்
கடவுள் நீயப்பா!

**வீரகேசரி 15.05 .88**

# வெயில் 'குளிருமோ'?

மதிய உணவுச்
சமையலிலிருந்த
அம்மா ' கண்ணா!
சந்திக்கடைக்கு
ஓடிப்போயொரு
அப்பளக்கட்டு
வாங்கிவாடா!
உனக்குத்தானடா'
எனக் குரல்
கொடுத்தாள்!
'நெருப்பாயெரியும்
வெயிலில் என்னைக்
கடைக்குப் போய்வரச்
சொல்லுகிறீர்களே'
எனச் சீறி எழுந்தான்
சிறுவன் கண்ணன்!



சில நிமிடங்களில்
படலைக்கு வெளியே
பலமாயொலித்தன
சைக்கிள் மணிகள்!
'அம்மா..........!
நானிப்பொழுது
கிரிக்கெட்
அடிக்கப் போகிறேன்'
என்று கூவிக் கொண்டு
கண்ணன்
தனது நண்பர்களுடனே
ஓடிடக் கண்டு
'கடைக்குப் போகச்
சுடுகின்ற வெயில்
கிரிக்கெட் அடிக்கக்
குளிருமோ?' எனக்
கண்ணனின் அம்மா
வியந்து நின்றாள்!

சஞ்சீவி 20.05.89



கிழக்கும் மேற்கும்

# “ஔவையாரும் சோக்கிரட்டீசும்”



அறிஞுரை வளர்த்த அன்புக் கொருகதை!
அறிஞுரை வதைத்த வன்புக் கொருகதை!!
அவனியில் இப்படிக் கதைபல இருப்பினும்.......
அவைகளில் இரண்டினைக் கவிதையில் தருகின்றேன்!

மேற்கு நாடாம் கிரேக்கத் துதித்தவன்!
பேரறி வாளனாம் தத்துவ ஞானியாம்
சோக்கிரட் டீஸ்தன் கிரேக்கத் திளைஞரின்
சோம்பலைப் போக்கி அறிவொளி ஏற்றினான்!
அறிவுச் சுடரினைச் சகித்திடா மன்னவன்
அறிவுச் சுடரினை ஏற்றிய அறிஞன் மேல்
ஆட்சிக் கெதிராயச் சூழ்ச்சிகள் செய்வதாய்
ஆட்சி மன்றினில் குற்றம் சுமத்தினான்!
ஞானச் சுடரினை அழிப்பதாய் எண்ணியே
ஞானியின் உயிரினை நஞ்சுதந் தழித்தான்!!

முத்தமிழ் மன்னர் இத்தரை போற்றிட
முத்தமிழ் நாட்டினை முறையுடன் ஆண்டனர்!
சேரநன் னாட்டினில் தகடூர் நகர்தனை
நேர்நின் றாண்டவன் கூர்நல் மதியினன்
அருந்தமிழ் மன்னனாம் அதியமான் தான்பெற்ற
அதிசயக் கனியதாம் நெல்லிக் கனியினைத்
தாமே உண்டதன் நலங்களைப் பெற்றிந்தத்
தாரணி ஆண்டிடும் தன்னலம் தள்ளினான்!
நலமுடன் நெடுநாள் வாழ்ந்திட வேண்டியே
பலமுடன் தமிழ்ப் பணி இயற்றிட வேண்டியே

பாடிப் பாடியே செந்தமிழ்ப் பணிசெய்த
பாட்டி யானஎம் ஔவை மூதாட்டிக்கு
அன்புடன் அக்கனி அளித்தவன் மகிழ்ந்தான்!
இன் தமிழ் வளர்க்கும் நற்பணி புரிந்தான்!!

வதைகள் அப்படிப் பலவுண்டு தாரணியில்!
கதைகள் இப்படிப் பலவுண்டு தமிழினில்!!
இவைகளிரண்டுமே இருவிதம் பொருளினில்!!
இவைகளின் தரத்தினை மதிப்பதும் பொறுப்பினில்!!

**வாரமுரசொலி 09.07.89**

## *பைந்தமிழ் வேந்தர் வாழ்வு*



**வேடனின் கையில் சிக்கி**
**வெண்புறா மாளா வண்ணம்**
**வேடனின் விருப்புக் கொப்பத்**
**தன்தசை வெட்டித் தந்தும்**
**வெண்புறா நிறைக்கு ஒப்பத்**
**தன்னையே உவந்து தந்தும்**
**வெண்புறா உயிரைக் காத்தான்**
**சிபியென்னும் மன்னர் மன்னன்!**

மன்மகன் ஓட்டிச் சென்ற
தேர்ச்சில்லில் சிக்கிக் கொண்டு
தன்கன்று இறந்த தென்னும்
தாய்ப்பசு குறையைக் கேட்டுத்
தன் மகன் மேலே தேரை
ஓட்டிடப் பணித்துச் சோழன்
என்றென்றும் நிலைக்கும் வண்ணம்
மன்னுயிர் நீதிகாத்தான்!

குற்றங்க ளொன்றும் இல்லாக்
கோவலன் மீதில் கள்ளக்
குற்றத்தைச் சுமத்தி அன்னான்
இன்னுயிர் போக்கும் ஆணை
இட்டதை அறிந்த போதே
தன் பிழை உணர்ந்த மாறன்
'சட்' டென வீழ்ந்து மாண்டான்!
சிலம்பிலே நிலைத்துக் கொண்டான்!

'பேரிருள் வேளை இல்லக்
கதவினை யாரோ' தட்டிக்
பேரிடர் செய்தான் 'என்ற
குடிமகன் குறையைக் கேட்டுப்
' பேரிடர் செய்த கள்வன்
யாரென அறிவேன்' என்னப்
பேரவை வியந்து நின்ற
வேளையில் வாளினால் தன்
கரத்தினைத் துணித்துக் கொண்டு
நீதியைக் காத்து நின்ற
தரத்தினால் பாண்டி மன்னன்
தமிழிலே நிலைத்துக் கொண்டான்!

நீதியைப் போற்றி வாழ்ந்து
ஞாலத்தில் நின்று வாழும்
நீதிக்காய் வீழ்ந்த போதும்
காலத்தை வென்று வாழும் ;
நீதியின் மைந்தர் வாழ்வை
நீவிரும் அறிந்து கொள்வீர்!
நீதியைப் போற்றி வாழ்வீர்!
காலத்தை வென்று வாழ்வீர்!!!

வாரமுரசொலி **23.07.89**

# ஆசைச் சி [று] வன்



அங்கே அம்மா
இல்லை என்பதை
அறிந்து கொண்டதும்
அடுப்படிக் குள்ளே
அசவர மாக ஓடிச்
சென்றான் சின்னக் குமரன்!
இடியப்பம் பிழிந்திடப்
பதமாக அம்மா
குழைத்துவைத் திருந்த
மாவிலே தனது
சின்னக்கை நிறைய
எடுத்துக் கொண்டு
என்னிடத்துக்கவன்
ஓடிவந்தான்!

எடுத்த மாவில்
ஆடும் நாகம்
அழகாய்ச் செய்தான்
அதனைப் பிசைந்து
சிவலிங்கம் செய்தான்!
பின்னதைப் பிசைந்தவன்
அம்மி குழவி,
உரல் உலக்கை
செய்து பார்த்தான்!
பிசைந்தந்த மாவில்
விமானம் செய்தான்!
குமரன் எங்கென
அதட்டிய வண்ணம்
அவனைத் தேடி
வந்த அம்மா

"இடியப்ப மாவில்
விளையாட்டா" என
மாவைப் பறித்து
இடியப்ப உரலில்
இட்டுப்பிழிந்தாள்!!

சிறுவனின் கைகளில்
அகப்பட்டுக் கொண்டு
திசை மாறியமா
அம்மா கையினில்
அகப்பட்ட போது
அதனது இலக்கை
அடைந்தது போல
ஆசைச் சிவனின்
கைகளில் பட்டதால்
உயிர் மாவுக்கு
வடிவங்கள் பற்பல!
வகைகளும் பற்பல !!
ஆசைச் சிவனெம்மை
கைவிடுவானா?
அணைக்கும்அம்மையின்
கைப்படுவோமா?

**வாரமுரசொலி 27.08.89**

# புரியுதா?



பிறப்பு முதல்
தொடர்ந்து வரும்
பிரிவில்லா நிழலிது!

மறந்திருக்கும்
மனிதரையும்
நினைத்து வரும் நிழலிது!

விலகிச் செல்வோர்
எவரெனினும்
அணுகி நிற்கும் நிழலிது !

முதலில் வரும்
இடையில் வரும்
என்றும் வரும் நிழலிது!

எங்கு வரும்?
எதனில் வரும்?
என்றறியாப் புதிரிது!

வாழ்ந்தவர்க்கும்
தாழ்ந்தவர்க்கும்
வாய்க்குமிது நிச்சயம்!

எந்த நிலை
பெற்றவர்க்கும்
இந்நிலைமை நிச்சயம் !

உயர்வு தாழ்வு
வறுமை செல்வம்
பேதம் போக்கும் மருந்திது!

இன்று நாளை
என்று தவணை
ஏதுமில்லாத் தீர்ப்பிது!

வினை முடிந்தால்
தினைப் பொழுதும்
காத்திராத் தீர்ப்பிது!

வந்த பணி
முடித்தவர்க்கு
வழியனுப்பும் நிகழ்விது!

என்னவென்று
புரியுதா?
மரணமென்று
புரியுதா?

**வார முரசொலி 06.08.89**



## எங்களின் பண்புகள்

எங்களின் பண்புகள் தனித்துவம் மிக்கவை!
எங்களின் பண்புகள் "நரிக்குணம்" மிக்கவை!!
அடுத்தவர் சிரித்திடின் கண்ணீர் விட்டழுவோம்!
அடுத்தவர் அழுதிடின் கைகொட்டிச் சிரிப்போம்!

நலம் தரும் பணியேதும் நாம் செய்யமாட்டோம்!
நலம் தரும் பணிசெய்ய நாம் விடமாட்டோம்!!
உருப்படும் படியேதும் நாம் செய்யமாட்டோம்!
உருப்பட எதனையும் நாம் விடமாட்டோம்!!

முன்னின்று எதனையும் நாம் செய்யமாட்டோம்!
பின்நின்று குறைசொல்லி நாமோய மாட்டோம் !!
அயலாரின் அறிவுரை நாமேற்க மாட்டோம் !
அயலாருக் கறிவுரை நாமூட்டத் துடிப்போம்!!

மற்றவர் குறைகளே எம்கண்ணில் தெரியும்!
மற்றவர் குறை சொன்னால் எம்முள்ளம் எரியும்!!
நீதியை அயலவர்க் குரைத்திடத் தயங்கோம்!
நியாயமாய் மற்றவர் நடந்திட வேண்டுவோம்!!

நியாயத்தை மற்றவர்க் கழித்திடத் தயங்குவோம்!
பண்பில்லாப் பண்புள்ளோம்! எம்மினம் வாழுமா?
கண்ணில்லாப் பண்புகள்! கருத்தில் லாப்பண்புகள்!
அழுவதா? சிரிப்பதா? நானொன்றும் அறியேன்!!

**முரசொலி 13.05.90**

# அதிசய மென்ன ?



உயர்திணையான
மனிதர்கள் இங்கே
அ.்.றிணை யானதன்
அதிசயமென்ன?

சாய்மனைக் கதிரையில்
ஓய்வாயிருந்த
அப்பாவின் கண்களில்
வீட்டு முற்றத்தில்
நிழலொன்று தெரிந்திட
"பிள்ளை...... பாரது......
யாரென்றொருக்கால்" எனக்
குரல் கொடுத்தார்!
எட்டிப் பார்த்த
செல்வமகள்.......
"அப்பா...... அது.......
தேங்காய் பிடுங்கிற
சின்னப்பொடிதான்
வந்து நிற்குது" எனப்
பதிற் குரல் கொடுத்தாள்!

உயிருடன் உலகில்
அந்தப் பெரியவர்
உலவிய வரையிலும்
"ஐயா......!
வாருங்கள்.........!" என
அனைவரும் அவரை
முன்னெதிர் கொண்டு
அகம்முகம் மலர்ந்திட
அன்புடன் அழைத்தனர்!
ஒருநாள் அவரின்
இறுதி ஊர்வலம்
வீதி வழியே
நகர்ந்து வந்தது!
இதனைக் கண்டவர்
"சவம் வருகுது" என
முகத்தைச் சுழித்து
முணு முணுத்தவராய்
ஒதுங்கி நின்றனர்!

படலையடியில்
"அம்மா..." என்றொரு
குரல் கேட்டிடவே -
"படலையடியில்
நிற்பது யாரென்று
பாரம்மா......" என
அடுப்படிக்குள்ளே
இருந்தபடி அம்மா
மகளைக் கேட்டார்!
யன்னலில் நின்று
பார்த்த மகள்
"போன வெள்ளி
பிச்சைக்கு வந்ததுதான்
வந்து நிற்குது" எனப்
பதில் குரல் கொடுத்தாள்!
வெளியே சென்றிருந்த
அன்புப் புதல்வி
ஆவல் பொங்கிட "சீசர்......!

என்ரை டாலிங்!
கனநேரமா யுன்னைக்
காணவில்லையடா!
எங்கே இருக்கிறாய்? எனக்
கூவிக் கொண்டு
வீட்டினுள் நுழைந்தாள்!
இடுப்பளவு உயரத்திற்குக்
கொழுத்து வளர்ந்த
உயர் சாதி நாயொன்று
படுக்கையறையினுள்
படுக்கையிலிருந்து
பாய்ந்து இறங்கி
ஓடி வந்து
அவள்முன் நின்றது!
"என்ரை டாலிங்" என
அன்புடன் அதனை
வாரி அணைத்தாள்!

உயர்திணை எப்படி
தாழ்ந்தது இங்கே?
அஃறிணை எப்படி
உயர்ந்தது இங்கே?
இது ஒரு மாற்றமா?
அல்லதோர் மயக்கமா?

**சாளரம் மார்ச் - ஏப்ரல் 1992**

## வ(ா)ன் பயணம்

எங்களுடைய
பாட்டன் காலத்தில்
பள்ளிக்கூடங்களில்
ஆசிரியர்கள்
பாடம் படிக்காத
பையன்களை
மேசைக்குக் கீழே
தலையைக் கொடுத்துக்
குனிந்து நிற்கவைத்துத்
தண்டிப்பார்களாம்!
உண்ணில் நாங்கள்
பணயம் செய்யும் போதும்



பலவேலைகளில்
பாட்டன் காலத்துத்
தண்டனைகள்
எங்களுக்குங் கூடத்
தரப்படுகின்றனவே!

# மனிதனும் மரமும்



மதிற் கரையோரம்
செழித்து நின்றது -
பூமரமொன்று!
வண்ண மலர்களை
வாச மலர்களைத்
தினமது பூக்கும்!
அதன் சில கிளைகள்
மதிலையும் கடந்து
வீதி வரைக்கும்
நீண்டு இருந்தன!
வீதி வழியே
போய் வருவோர்கள்
மதிலைக் கடந்த
கிளைகளில் மலரும்
மலர்களைக் கொய்வார்!
பல நாட்களாக
இதனைக் கண்டு
மனம் கொதித்திருந்த
வீட்டுக்காரன் -
அவன் தான் - பூமரத்தின்
சொந்தக்காரன் -
ஒரு நாட் காலையில்
கையிலே ஓர்
கூரிய கத்தியை
எடுத்துக் கொண்டான்!
அப் பூ மரத்தினை
நோக்கி நடந்தான்!
தன்னை நோக்கி
வருகின்ற மனிதனைக்
கண்டது பூமரம்!
அவனது நோக்கையும்
ஒருவாறு ஊகித்து
உணர்ந்து கொண்டு......
"என்ன விசேஷம்...........
கையில் கத்தியுடன்......?" எனப்
பூமரம் கேட்டது -
மனிதனைப் பார்த்து!
"மதிலுக்கு வெளியே
நீண்டுள்ள கிளைகளை
வெட்டப் போகின்றேன்!"
"எதற்காகவோ?"
"கிளைகள் யாவும்
முதிர்ந்து விட்டன!
வெட்டி விட்டால்
புதிய தளிர்கள்
செழித்து வளரும்!
அழகாய் இருக்கும்!
அதிக பூக்களும்
அவற்றில் பூக்கும்!
போய் வருவோர்கள்
கொய்யலாம் அல்லவா?
அதனால்தான்.........."
"உண்மை அதுவல்ல!
உன் மனம் அறிவேன்!
உன் மனம் உணர்வேன்!"
'இல்லை.......இல்லை!

அதுதான் உண்மை!"
"உன் உள்ளத்தில்
உள்ளதைச் சொல்லவா?"
"சொல்லு பார்க்கலாம்'
"உண்மையைச் சொன்னால்
ஏற்றுக் கொள்வாய்.......?'
'உண்மையென்றால்
ஏற்றுக் கொள்வேன்"
"தேவை அறிந்து
பசளையிட்டு
காலம் அறிந்து
தண்ணீர் பாய்ச்சி
மாடாடு தின்னாது
காவல் காத்து
நீ பாடுபட்டிட........
வீதியில் போய்வரும்
எவரெவரோவெல்லாம்
மலர்பறிக்கிறார்கள்!
இதனைக் கண்டு
உள்ளம் கொதிக்கின்றாய்!
அதன் வெளிப்பாடாகவே
கத்தியும் கையுமாய்
என்முன் நிற்கின்றாய்!
இதுதான் உண்மை
மறுக்க முடியுமா?
மறைக்கவும் இயலுமா!
"......................................"
"என்ன மௌனம்?"
உண்மையைச் சொன்னதால்
உள்ளத் திகைப்பா?
"நீ என் சொந்தம்!
என்னிடமிருந்து
அனுமதி பெறாது
தான் நினைப்பதுபோல்
பூக்களைப் பறித்திட
நான் பார்த்திருப்பதுவோ!
நான் என்ன பேயனா?"
"சரி! அவர்களெல்லாம்
எதனைப் பறித்தனர்?"
"மலர்களையல்லவா?"
"மலர்களைத்தானே....?"
"என்ன உன் கேள்வி?"
"மாலை வந்ததும்
கூம்பிடும் மலரைத்தானே -
மறுநாள் மண்ணில்
வீழ்ந்திடும் மலரைத்தானே
கொய்கின்றார்கள்.....?"
"எள்ளளவேனும்
நானிதை ஏற்கேன்!
நீண்டுள்ள கிளைகளை
வெட்டப் போகின்றேன்!
"சற்றுப் பொறுத்திடு!
கேட்குமென் கேள்விக்குப்
பதில் சொல்லிவிட்டு.....
அதற்குப் பின்னரும்
எனது கிளைகளை
வெட்ட வேண்டுமெனில்

வெட்டித் தள்ளு"
"என்ன உன் கேள்வி"
"உலக வாழ்க்கையின்
என்ன நோக்கமாம்?"
"மக்களுக்கு மக்கள்
உதவி வாழ்வதே!
இல்லாதவர்க்கு
உதவி வாழ்வதே!"
"என்னப்பா நீ?
சொல்வது ஒன்றாக
செய்வது மாறாக
இருக்குதுன் வாழ்க்கை!"
"இல்லை.... இல்லை!
சொல்வதைச் செய்கிறேன்!
செய்வதைச் சொல்கிறேன்!
"உண்மையாகவோ?"
"உண்மையாகவே!"
"என்றோ ஒரு நாள்
எவனோ ஒருவன்
தேவையைக் கருதி
மலர் கொய்வதனைச்
சகித்திடும் நல்மனம்
இல்லாத நீயா
மக்களுக்கு உதவுவாய்?
அதுவும் - எதுவும்
இல்லாத மக்களுக்கு
உன்னிடம் உள்ளதை
உதவவா போகிறாய்?
"......................................."

"என்ன மௌனம்?"
"இல்லை......."
"என்ன இல்லை?
என்று இழுக்கின்றாய்?"
"......................................."
"பிற்பகலானதும்
வாடி வதங்கும்
மலர் பறிப்பதனை
மனம் பொறுக்காத நீ
இல்லாதவர்க்கு
உன்னிடம் உள்ள
பணம் பொருள் கொடுத்து
உதவுவாய் என்று
எப்படி நம்பலாம்?"
"..............................."
"என்ன பதிலில்லை?"
அவனோ மெதுவாய்த்
தனது கால்களைப்
பின்புறமாக
நகர்த்த முனைந்தான்!
இதனைக் கவனித்த
பூமரம் சிரிப்புடன்.....
"என் கேள்விக்குப்
பதில் சொல்லாது
நழுவவாபார்க்கிறாய்?
பதிலைச் சொல்லன்...."
என்றது அவனிடம்!
"சரி...சரி...அதைவிடு"

"எதனை விடுவது?
எப்படி விடுவது"
சிறிது நேரம் அவன்
மௌனமாய் நின்றான்!
'நினைத்து வந்தஉன்
வேலையை மறந்து
போவது நல்லதோ?
வெட்ட வந்தாய்!
வெட்டித் தள்ளு!"
"இப்ப வேண்டாம்!
வேறொரு நேரம்
பார்த்துக் கொள்ளலாம்"
"எப்போதெனினும்
வெட்டுவதென்றால் இன்றே வெட்டு!
தவணை போடாதே"
"இல்லை! இல்லை"
அந்த எண்ணம்
எனக்கில்லை இப்போ"
'அப்படியாமோ.....?
அப்படியேனோ
அப்படியென்றால்....
போய்வா மகிழ்ச்சி!!"
என்றதும் அவனோ
"தப்பினேன் பிழைத்தேன்!"
என்றெண்ணிக் கொண்டவன்
அவ்விடம் விட்டுடன்
விரைந்தே சென்றான்!
தெளிவுடன் சென்றான்!
முடிவுடன் சென்றான்!

***

சாளரம் பெப்ரவரி 95

## மனமாற்றம்

மயிர்கொட்டிப் புழுவாக
நான் இருந்தேன் அன்று!
குழந்தைகள் முதலாக
முதியவர்கள் வரை
என்னைக் கண்டவுடன்
துடிதுடித்தார்-
அச்சத்தினால்!
பருவமாற்றத்தினால்
வண்ணத்துப்பூச்சியாக
வடிவெடுத்தேன் இன்று!
மலருக்கு மலர் நான்
பறப்பதனைக்கண்டும்
தேன் குடிப்பதனைக் கண்டும்
குழந்தைகள் என்னைக்
கைகளால் பிடித்து
விளையாடி மகிழ்ந்திடவே
துடிதுடிக்கின்றார் -
ஆசையினால்!
இதுவே -
உருவமாற்றத்தால்
உருவான மனமாற்றம்!



# வீதிகள்.....

வீதியைப் பார்க்குமென்
பன்முகப் பார்வை!
பன்முகப் பார்வையின்
கோர்வை இப்பாக்கள்!!

★

ஊர்களுடன் ஊர்களை
மக்களிடம் உறவுகளை
பிணைக்கின்ற நெடிய
சங்கிலி இதுவோ?

★

நகரங்களுக்கும்
கிராமங்களுக்கும்
உயிரூட்டும்
உணர்வூட்டும்
உணவூட்டும்
நரம்புத் தொகுதியோ?

★

வயிற்றெரிச்சலுடன்
வரிகளைக் கொடுக்கின்ற
வரியிறுப்பாளர்களின்
குப்பைத் தொட்டிகளோ?

★

நாதியற்றவர்களின்
ஏதுமற்றவர்களின்
வீடற்றவர்களின்
“குடியிருப்பு” இதுவோ?

★

வாகனங்கள்
ஓடி விளையாடுவதும்...
சில வேளைகளிலே
மோதித் தடுமாறுவதும்...
இந்நெடும் அரங்கிலோ?

★

வாகனங்களும் பயணிகளும்
பயணம் செய்திட
விதிமுறைகள்
விளக்குகள் உண்டாமே!
விதிமுறைகளையும்
விளக்குகளையும்
அலட்சியம் செய்தால்
விதியும்கூட
விபரீதமாகுமாமே!!

★

வேண்டியவர்களின்
சந்திப்புக்கூடமிதோ?
வேண்டாதவர்களின்
சண்டைக்கூடமிதோ?

★

இவற்றுக்கிடை யிலுமா
மணல் ஒழுங்கை
கிரவல் தெரு
கல்லு றோட்டு
தார் வீதியெனப்
பேதங்களை மனிதர்
உருவாக்கியுள்ளனர்?

★

★

மனிதர்கள்தானே
இவைகளிடையேயும்
ஏ,பீ,சீ,டீ,ஈ என்று
வகுத்து வைத்துள்ளனர்!

★

பிரதான வீதி
கிளை வீதி
குறுக்குத் தெரு
கையொழுங்கை எனப்
பிரிவினை செய்தவரும்
மனிதர்கள்தானே?

★

இவற்றிற்கு
ஒவ்வொன்றிற்கும்
ஒவ்வொரு பெயரை.....
அறிஞர்கள்
தொண்டர்கள்
தியாகிகள்
வீரர்கள் முதலானோரின்
பெயர்களைச்...
சூட்டிவைப்பவர்களும்
இந்த மனிதர்கள்தானே?

★

மங்கலம்
அமங்கலம்
அரசியல்
தொழிற்சங்கம்
சமயம் என
விதம் விதமான
ஊர்வலங்கள்
வலம் வருகின்ற
ஊர்வல அரங்கிதோ?

சுலோகங்கள் எழுதும்
சுவரொட்டிகள் ஒட்டும்
"வாழ்க" கோஷங்கள்
"வீழ்க" கோஷங்கள் எழுதும்
அதை அழித்தெழுதும்
விளம்பரப் பலகைகளும்
இதுதானோ?

★

வீடுகளில்
வேண்டப்படாத
நாய்க்குட்டிகள்
பூனைக் குட்டிகளின்
"சரணாலயம்" இதோ?

★

கட்டாக்காலி நாய்கள்
மாடுகள் ஆடுகளின்
உணவுக்கூடமும்
உறங்கும் கூடமும்
இதுதானாமோ?

★

இதுதானோ
வீடுகளிலே
இறந்து போன
எலிகள் பூனைகள்
கோழிகள் முதலானவற்றின்
இடுகாடும்?

★

நாய்களினதும்
நலம்விரும்பாதவர்களினதும்
"கழிப்பறையும்"
இங்குதானோ?

தாம்பூலம் தரிப்போர்
சுருட்டுப் பிடிப்போர்
நோயாளர் என்றெவரும்
எந்நேரத்திலும்
எவ்விடத்திலும்
கூச்சமில்லாது
தடையேதுமில்லாது
கவலையுமில்லாது
எச்சில் உமிழ்ந்திடும்
"எச்சிற்படிகமோ?"

★

இதன்மேலே
கால் வைத்தவுடன்
"சுதந்திரங்களுக்கு
எல்லைகள் எதுவும்
இல்லை" என்று
அதிகமானவர்களைச்
சிந்திக்கவும்....
செயற்படவும்....
செய்திடுவதன்
"விசித்திரம்" என்னவோ?

★

மழைகாலத்தில்
காக்கை குலத்தின்
குளியலறை
நீச்சற் தடாகம் இதுவோ?

★

கிட்டிப்புள்ளு தாச்சி
மாபிள்
கிரிக்கெட் விளையாடும்
சிறுவர்களின்
விளையாட்டு அரங்கமிதோ?

★

செய்வதற்கென்றோர்
வேலையுமின்றியும்.....
செல்வதற்கோர்
காரணம் இன்றியும்.....
தெருவில் அலைவோரை
"தெரு அளப்பவர்" என்று
பழித்துக் கூறிடும்
பழக்கமுண்டன்றோ?

★

வீதியில் ஒருவர்
நடப்பதைப் பார்த்து
அவரின் நடத்தையை
மதிப்பாராம் முன்னோர்!

★

சிங்கப்பூர் முதலான
வளர்ந்த நாடுகளில்
இவைகளின் தரமோ
அதியுயர்வானதாம்!
இவைகளின் எழிலோ
பேரெழிலானதாம்!!
இவற்றின் சுத்தமோ
மிக உயர்வானதாம்!!

★

மின்னோடும் வழிகள்
தொலைத் தொடர்பு வழிகள்
கழிவுநீர் வாய்க்கால்கள்
குடிநீர்க்குழாய்கள் எனப்
பலவற்றினைத்தன்
"கருவினிலே"
காலங்கள் தோறும்
சுமக்கின்ற தாயிதோ?

★

நனைந்த விறகுகள்
கழுவிய உடைகள்
மெத்தைகள் பாய்கள்
நெல் முதலானவை
காயப்போடும்
"காய்ச்சல் நிலம்" இதோ?

★

வீதியின் தேவைகள்
விரித்தடல் கூடுமோ?
வீதியின் சேவைகள்
விளக்கிடல் கூடுமோ?

**தினகரன் 97.01.26**

# கொத்து ரொட்டி போடுகிறார்

டகடகடக..... டகடகடக
டகடகட.... டகடகடக

தெருவோரம் அமைந்துள்ள
தேநீர்க் கடைமுன்னே
தார்ப்பீப்பா அடுப்பின் மேல்
காயும் கரும் தட்டினிலே
ரொட்டி "ஓடர்" தந்துவிட்டுக்
காத்துக்கொண்டு
கடையினுள்ளே
இருப்பவர்க்கு ரொட்டிதர
ரொட்டிக்காரர் அதோ வந்து
கொத்து ரொட்டி
போடுகின்றார்!
டகடகடக..... டகடகடக
டகடகடக..... டகடகடக

ரொட்டியினைத் தட்டிச் செல்ல
சுற்றிப்பறக்கும் காக எச்சம் -
தெருவினிலே விரைந்து
செல்லும்
கார் கிளப்பும் புழுதிகொஞ்சம் -
பஸ்ஸில் செல்லும்
பயணியுமிழ்ந்த
பாக்குவெற்றிலைக்
குழம்பு - வீசும்
காற்றில் கலந்து பரவி
வந்த தூற்றலிலும் கொஞ்சம் -
சேர்த்து
உடம்பில் வழியும்
வியர்வையதனைத்
துடைத்தெறிந்த கைகளாலே
ரொட்டிக்காரர் மாவைப்
பிசைந்து
கொத்துரொட்டி போடுகின்றார்!

டகடகடக..... டகடகடக
டகடகடக..... டகடகடக

**ஈழநாடு 02.12.29**



# நட்புயிர் நட்பு

இன்பத்தில் இணைந்துடன்
நிற்குமோர் நட்பு!
துன்பத்தில் பிரிந்துடன்
செல்லுமோர் நட்பு!!

தன்தேவை கண்டதும்
போற்றுமோர் நட்பு!
தன் தேவை முடிந்ததும்
தூற்றுமோர் நட்பு!!

எம்துயர் ஓங்கவே
விலகுமோர் நட்பு!
எம்துயர் நீக்கவே
இணையுமோர் நட்பு

உதவிடப் பிந்தினால்
சினக்குமோர் நட்பு!
உதவிட மறுத்தால்
சபிக்குமோர் நட்பு!!

தங்களின் தேவைக்காய்
நாடுமோர் நட்பு!
தம்தேவை முடிந்ததும்
ஓடுமோர் நட்பு!!

தன்துயர் தீர்த்திடத்
தவிக்குமோர் நட்பு!
பிறர்துயர் தீர்திடத்
தயங்குமோர் நட்பு!!

எம்முன்னால் எம்மைப்
போற்றுமோர் நட்பு!
எம் பின்னால் எம்மைத்
தூற்றுமோர் நட்பு!

உதவிகள் அளிப்பினும்
ஏற்குமோர் நட்பு!
உதவிகள் மறுப்பினும்
ஏற்குமோர் நட்பு!!

சிரித்துக் கதைத்துடன்
இருக்குமோர் நட்பு!
சிறிதள வென்றாலும்
உதவிடா நட்பு!!

சந்திக்கத் தவறினால்
தவிக்குமோர் நட்பு!
சந்திக்கும் போதுளம்
நெகிழுமோர் நட்பு!!

உதவியைக் கேட்டால்
நழுவுமோர் நட்பு!
உதவியைக் கேட்டால்
இழிக்குமோர் நட்பு!!

சிரிக்கின்ற எம்முடன்
சிரிக்குமோர் நட்பு!
கலங்கிடும் எம்முடன்
கலங்குமோர் நட்பு!!

தவறாக நடந்தால்
தடுக்குமோர் நட்பு!
சரியான வழியினில்
நடத்துமோர் நட்பு!!

படலை வரையெம்மைத்
தொடருமோர் நட்பு!
சுடலை வரையெம்மைப்
படருமோர் நட்பு!!


எம்துயர் துடைக்கத்தன்
உயிர் தரும் நட்பு!
எம் துயர் துடைத்த பின்
உறங்குமோர் நட்பு!!

பிரிவிலுமுளம் கலங்காது
இருக்குமோர் நட்பு!
பிரிவிலுளம் கலங்கித்
தவிக்குமோர் நட்பு!!

நட்புயிர் நட்பாய்த்
திகழ்வதும் உண்டு!
நட்புயர் நடிப்பாய்
நிகழ்வதும் உண்டு!!

**தினகரன் வாரமஞ்சரி 20.01.2002**

# மின்சாரம்



அனலால் வருவாய் -
அணுவால் வருவாய் -
புனலால் வருவாய்-
மின்வலு நீயே!

உன்வலு அதிகம்!
உதவிகள் அதிகம்!
உன்வலு இன்றேல்!
அவதியும் அதிகம்!

முறையுடன் பழகினால்
உதவிகள் செய்வாய்
முறை பிழைத்தாலோ
மன்னிக்க மாட்டாய்

## மாயம்!

நில்லா உலகில்
நில்லா இந்த
மனித உடம்பைக்
"காயம்" என்கிறார்!

ஆயுதத்தாலோ
வேறெதனாலோ
மனித உடம்பில்
வருகின்ற புண்ணையும்
"காயம்" என்கிறார்!

உடம்பும் "காயம்"!
புண்ணும் "காயம்"!
இது என்ன மாயம்?

## வேண்டாம் பிடி!

அரிசியும் ஒரு
"பிடி"யை எடுத்து
இரப்பவர்க்களித்தால்
தருமம் சேரும்!

கூரிய கத்திக்குப்
"பிடி யிடுவதனாலது
வெட்டுபவர் கைக்கு
இதமாயிருக்கும்!

ஆனால்................
எப்பொருள் பற்றிய
வாதமென்றாலும் -
வாதத்திற்கு யாருமே
"பிடி" சேர்க்காதீர்!
ஏனெனில் - அதனால்
வாதத்துக்கோர்
தீர்வு சொல்லுமோர்
வாய்ப்புக் கூட
பிடிவாதமாகி
வழுவிப் போகும்!!



## *சந்தோஷம் கேட்கிறார்*

திருமணப் போக்குகள்
அந்நாளில் வேறாகும்!
திருமண நோக்குகள்
இந்நாளில் வேறாகும்!

நாள்கோள் கணித்தேனோ
அந்நாளில் திருமணம்?
நாள்கோள் கழித்தேனோ
இந்நாளில் திருமணம்!

சொந்தங்கள் பார்த்தே
முந்நாளில் திருமணம்!
சொத்துக்கள் பார்த்தே
இந்நாளில் திருமணம்!!

நடையுடை மதித்த பின்
முன்பெல்லாம் திருமணம்!!
நகை எடை கணித்தபின்
இன்றெல்லாம் திருமணம்!!

குணநலம் அறிந்த பின்
அன்றைய திருமணம்!
பணபலம் அறிந்தபின்
இன்றைய திருமணம்!!

இலட்சணம் பார்த்தபின்
திருமணம் அந்நாளில்!
இலட்சங்கள் பார்த்தபின்
திருமணம் இந்நாளில்!!

இருமனம் கலந்தாலே
திருமணம் அந்நாளில்!
திருபணம் இருந்தாலே
திருமணம் இந்நாளில்!!

மனங்களின் பொருத்தத்தை
மதித்தனர் அன்று!
பணங்களின் பொருக்கத்தை
மதிக்கின்றார் இன்று!!

சீதனப் பணத்தில்தான்
பொற்தாலி கூறைகள்!
சீதனப் பணத்தில்தான்
திருமணச் செலவுகள் !!

இலட்சங்கள் சந்தோஷம்
தரவில்லை என்றாமோ
இலட்சங்கள் பெற்றாலும்
"சந்தோஷம்" கேட்கின்றார்?

இலட்சணம் இருந்தாலும்
உயிர்க்காதல் சாய்ந்திடும்
இலட்சங்கள் இருந்தாலே
உயிர்க்காதல் வாழ்ந்திடும்!

அந்நாளில் எங்களின்
திருமணம் புனிதமாம்!
இந்நாளில் எங்களின்
திருமணம் வணிகமாம்!

சீதனக் கொடுமையை
இப்படி விரிக்கலாம்!
சீதனக் கொடுமையை
இத்துடன் சுருக்குவேன்!

மங்கையர் வாழ்க்கையைச்
சாய்த்திடும் சீதனம்
எங்களின் கரம்பட்டுச்
சாய்வதும் எந்நாளோ?

**நங்கை நவம் 95**

# "என்நெஞ்சத்தாசைகள்"



இதயத்தின் அளவோ
மிகமிகச்சிறியது!
இதயத்தின் ஆசையோ
மிகமிகப்பெரியது!!

மனிதரின் மனங்களில்
ஆசைகள் பன்னூறு!
மனிதரின் ஆசையில்
நிறைவேறும் இரண்டொன்று!!

என்நெஞ்சத்தாசைகள்
பலவகை பாரினில் !
என்நெஞ்சத் தாசைகள்
சொல்லுவேன் பாவினில்!!

பெரும் பணக் காரனாய்
வாழவே எனக்காசை!
பெரும் பணம் சேர்க்க
அறிகிலேன் ஒரு பாதை!!

மிகப்பெரும் காரினில்
பறக்கவே ஆசை!
மிகப்பழம் சைக்கிளில்
உருள்கின்றேன் பேதை!!

ஓய்வின்றி உழைத்திட
உள்ளத்தில் ஆசை!
ஓய்வின்றி உழைத்திட
வேண்டுமோர் வேலை!!

நேர்மையாய் வாழ்ந்திட
என்மனத் தாசை!
நேர்மையைத் தடுக்குதே
என்வாழ்வின் ஏழ்மை!!

நீதிக்காய் வாதாட
நீண்ட நாள் ஆசை!
பீதியில் வாழ்கின்றேன்
நிலைக்குமோ ஆசை?

நாலுபேர் மதித்திட
வாழ்வதென் ஆசை!
நாலுபேர் சபித்திட
வாழ்கிறேன் பேதை!!

பேதமின்றி எல்லார்க்கும்
அன்புசெய்ய ஆசை!
பேதங்கள் பலவற்றால்
குழம்புகிற தாசை!!

அடுத்தவரின் தயவின்றி
வாழ்ந்திட ஆசை!
அடுத்தவர் தயவினில்
வாழ்கிறேன் - தேவை!!

தலை நிமிர்ந்து நடக்கவே
நீண்டநாள் ஆசை!
தலைகுனிந்து நடப்பதென்
இந்நாளின் தேவை!!

மேதையாய் வாழவே
நெடுங்கால ஆசை!
பேதையாய் வாழ்வதென்
நிகழ்கால வாழ்க்கை!!

இவ்விதம் ஆசைகள்
என்நெஞ்சில் கோடி!
எவ்விதம் சொல்லுவேன்
அனைத்தையும் பாடி?.

"ஆசையால் பிறப்புண்டு"
என்றனர் புத்தர்!
ஆசைகள் கெட்டதால்
விட்டதென் பிறப்பு"

**தினக்குரல் 18.03.01**

## புகழ்மாலை

இதனைத்தேடியே
செல்வாரும் முண்டு!
இதுவே தேடிச்
செல்வது முண்டு!
தன் பொருள் இழப்பர்-
தன் உயிர் இழப்பர்!
இதனைப் பெற்றிட
எதனையும் இழப்பர்!
இருக்கும் வரையில்
சூட்டிட மறப்பர்!

இறந்த பின்னரோ
சூட்டிடத் துடிப்பர்!
தமக்குத் தாமே
சூட்டுவார் உண்டு!
அடுத்தவர் சூட்டிட
ஏற்பாருமுண்டு!
சூடுவோர் நெஞ்சமும்
நிறைவதுமில்லை!
நாடுவோர் தெகையும்
குறைவதுமில்லை.!

## *வாழ்க்கை*

இப்படித்தான்
வாழ்வதென
வாழ்பவர்கள் -
வாழ்க்கையின்
காலடியில்!

எப்படியும்
வாழலாமென
வாழ்பவர்களின்
காலடியில்
வாழ்க்கை!

## விலைவாசியே!

ஓ........................
விலைவாசியே
உனது
விஸ்வருப தரிசனத்தால்
நாங்கள்
அரண்டுபோய் உள்ளோம்!
நீ மீண்டும்
எங்கள் கைக்குள் -
பார்வைக்குள் -
அமையும் படியாக
உனது உருவத்தை
மாற்றுவாயாக!

விலை வாசியே
எக்காலமும் நீ
நிலாவாசியாக
இருந்துவிடாதே!
நிலவாசியாக
எங்களுடன்
விரைவாக வந்துவிடு!
அப்போது தான்
நாங்களும்
சுகவாசிகளாவோம்!

## ச(ந்த)ர்ப்பம்

சந்தர்ப்பம்
என்பதும்
ஒருவகைச்
சர்ப்பமே!
ஒருவனை அது
தீண்டினால்
சில பொழுது
வாழ்த்தும்!
சிலநேரம்
ஆழ்த்தும்!

## ச(ட்)டம்

வலு இல்லாத
சட்டமும்
வல்லெழுத்து
"ட்" இல்லாத
சட்டமும்
சடமே!!



# "பாத்துமிகள்"

### பேனா!

எடுத்தவர் நினைத்ததை
எழுதிநீ முடிக்கிறாய்!
எடுப்பாரின் ஏவலைச்
செய்வதுன் விதியோ?

### தேர்தல்!

ஜனநாயகத்தில் தேர்தல்
ஓரங்கம் என்பார்கள்!
தேர்தலே ஜனநாயகம்
என்பாரும் இங்குள்ளார்!

### உழைப்பவர்!

உழைப்பவர் பின்னாலே
உலகமே திரளுது!
உழைப்பவர் வாழ்க்கை
இன்னுமேன் இருளுது?

### மிதிவண்டி!

காலால் உதைக்கவும்
ஏற்றுக் கொண்டோடுகிறாய்!
கழுதைபோல் சுமைகளை
ஏற்றிக் கொண்டோடுறாய்!

### கட்சி!

கொள்கைக்காய்க் கட்சி
அமைப்போரும் உள்ளார்கள்!
கட்சிக்காய்க் கொள்கை
வகுப்போரும் உள்ளார்கள்!

### குடிசைகள்!

ஏழையின் தேவைகள்
மலர்ந்திங்கே கருகிடும்!
ஏழையின் ஏக்கங்கள்
வளர்ந்திங்கே மறைந்திடும்

### ஏழைகள்

தேர்தலில் வென்றிடத்
தோன்றாத் துணையிவர்!
தேர்தலின் பின்னரோ
வேண்டாப் பொருளிவர்!

### விமானம்

பண்டங்கள் பயணிகள்
கொண்டிதில் செல்லலாம்!
குண்டுகள் கழிவுகள்
மக்கள் மேல் வீசலாம்!

### விற்பனையாளர்

பொருள்வாங்கும் போதிவர்
மண்ணென்றே சொல்லுவார்!
பொருள் விற்கும் போதிவர்
பொன்னென்றே சொல்லுவார்!

### தியாகம்

தன்னையே நாட்டுக்காய்
அளி(ழி)ப்பது தியாகம்!
தனக்காக நாட்டையே
அளி(ழி)ப்பது துரோகம்!

**வாக்களிப்பு நாள்!**

நாக்குறுதி அற்றவர்கள்
வாரி வழங்குகின்ற!
வாக்குறுதிகளை நம்பி
வாக்களிக்கும் நாளிதுவே!

**சாளரம் - யூலை ஓகஸ்ட் 1992**

**மெழுகுதிரி**

உன்னுடல் உருக்கியே
எமக்கொளி தருகிறாய்!
உன்மைத் தொண்டனின்
இலக்கணம் நீயன்றோ!

**நீர்**

நீரின்றி உணவு இல்லை!
நீரின்றி உயர் வில்லை!
நீரின்றி உலகில்லை!
நீரின்றி நானில்லை!

**வீதிகள்**

ஊருடன் ஊர்களை
இணைத்து வைக்கிறீர்!
ஊர்மக்களிடையினில்
உறவுகள் வளர்க்கின்றீர்!

**சவர்க்காரம்**

எம்தூய்மை காத்திட
உன்னையே கரைக்கிறாய்!
உன் தூய தொண்டினை!
போற்றிட யாருள்ளார்?

**வேட்பாளர்**

வாக்காளர்ப் பூக்களினை
சுற்றிப் பறந்து வந்து
வாக்குத் தேன் குடித்துப்
பறந்து செல்லும் தேனீக்கள்!

**காற்று**

அளவினைக் கடந்தால் நீ
அனர்த்தங்கள் விளைப்பாய்!
அளவுடன் தவழ்ந்தென்றும்
ஆனந்தம் விளைப்பாய்!

**மக்களும் தெருவும்**

பேதங்கள் இல்லாத
உங்கள் உளங்களில்
பேதங்கள் வளர்க்கின்றார்
மண்,கல், தாரென்று!

**கடிகாரம்**

“நேரம் பொன்” என்னும்
முதுமொழி அறிந்தோ நீ !
சோராது உழைத்தெங்கள்
சோர்வையும் உணர்த்துறாய்!

**கனவு**

தனிக்கை செய்திடாப்
பல்சுவைச் சித்திரம்!
தான் மட்டும் பார்த்திடும்
பல்வகைச் சித்திரம்!

### மலர்

மலர்ந்து அசைந்து
அழகைத் தருகிறாய்!
உலர்ந்து வீழ்ந்து
அறிவைத் தருகிறாய்!

### தேனீ

பறந்து பறந்து நீ
தேனைச் சேர்க்கின்றாய்!
மறைந்து வந்து உன்
தேனைப் பறிக்கின்றார்!

### பசு

கன்றுடன் பாலையும்
பசளையும் கொடுக்கிறாய்!
அன்பில்லா மனிதர்க்கு!
உன்னையும் கொடுக்கிறாய்!

### மது

" உன்னைக் குடிப்பேன்"
என்றவன் குடித்தான்!
" உன்னையும் குடிப்பேன்"
என மது குடித்தது!

### சூது

பொழுதைப் போக்கிட
ஆடத் தொடங்குவர்!
பொருளெலாம் போனபின்
வாடி அடங்குவர்!

**(சக்தி 1995)**

### விடுதலை

விடுதலை விரும்பினால்
கேடுகள் இடறும்!
விடுதலை இல்லையேல்
கேடுகள் தொடரும்!

### தீபம்

அடுத்தவர் பணித்திட
இருளை நீ துடைக்கிறாய்!
அடுத்தவர் தடுத்திட
இருளில் நீ கிடக்கிறாய்!

**சாரளம் ஒக்டொபர் 1992**

### இரத்தம்

என் நிறம் சிவப்பு!
உண்மைதான் -ஆயினும்
என்னுள்ளும் பிரிவுகள்
இருப்பதும் உண்மை தான்

## மின்சாரம்

கூட்டலும் (+) கழித்தலும் (-)
இணையும் போதினில்
நாட்டிலும் வீட்டிலும்
நல்லொளி பிறக்குமே!

## காதல்

ஏட்டில் படிக்கையில்
இனித்திடும் காதல்!
வீட்டில் நடக்கையில்
கசப்பது ஏனோ?

## அறிவுரை

பிறருக்குத் தரும்போது
பெருமை கொள்வதேன்!
பிறரதைத் தரும்போது
குறைவெனக் கொள்வதேன்?

## சூது

தொட்டவர் எவரும்
வாழ்ந்ததும் இல்லை!
விட்டவர் எவரும்
தாழ்ந்ததும் இல்லை!

## விஞ்ஞானம்

உயிரைக் காத்திட
மருந்துகள் தரும்நீ!
உயிரைக் குடித்திட
குண்டுகள் தருவதேன்?

## யுத்தம்

அவனியின் அழகை
அழித்திடும் யுத்தம்!
அமைதியின் உயர்வை
உணர்த்திடும் யுத்தம்!

## உழைப்பு

உழைப்பவர் யாரோ!
உண்பவர் யாரோ!
உழைப்பின் உயர்வை
உணர்வது கடிதோ!

## ச (கி) ம்பளம்

உழைத்துப் பெறுவது
சம்பளம் என்றால்
வளைத்துப் பெறுவது
கிம்பளம் தானே?

## தீக்குச்சு

உன்னினத்தவருடன்
உரசுகிறாய் எரிகிறாய்!
அந்நியருடன் நீ
இணக்கமாய் இருக்கிறாய்!

## எதுபோல்....?

நல்லதோர் நண்பன்
சுமைதாங்கி போலாம்!
நல்லதோர் தொண்டன்
கண்ணிமை போலாம்!

### சக்தி
மின்சக்தி உள்ளதை
மின்குமிழ் காட்டும் !
இறைசக்தி உள்ளதை
நிகழ்வுகள் காட்டும்!

### நூல்
சிறந்த நூலெனில்
ஆடை சிறக்கும் !
சிறந்த நூலெனில்
அறிவு சிறக்கும்!

### அடுத்தவன்
அடுத்தவன் வீழ்ந்தால்
துடிப்பாரு முண்டு!
அடுத்தவன் வீழ்ந்தால்
மிதிப்பாரு முண்டு!

### பழங்கள்
பழங்களை உண்டால்
உடல் நலம் தருமே!
பழங்கள்ளை உண்டால்
உடல் நலம் கெடுமே!!

### அறுப்பு
தும்பாக இருந்தேன்
கையால் அறுத்தார்!
கயிறாக இணைந்தோம்
கையை அறுத்தார்!

### சினம்
சினத்தைக் தணித்தால்
"பெரியவன்" என்பார்!
சினத்தை வளர்த்தால்
"சிறியவன்" என்பார்

### ஆசைகள்
ஆசையை வளர்த்தால்
தொல்லைகள் மலியும்!
ஆசையைக் குறைத்தால்
தொல்லைகள் குறையும்!

### கண்ணீரில் ?
அடுத்தவன் கண்ணீரில்
நிறைவோரும் உண்டு!
அடுத்தவன் கண்ணீரில்
கரைவோரும் உண்டு!

### பே(ச) ாதனை
போதனை முடிவில்
சோதனை! சோதனை!
சோதனை முடிவில்
சாதனை வேதனை!!

### (சி/இ) வன்செயல்
செய்தொழில் வென்றால்
"இவன் செயல் " என்பர்!
செய்தொழில் தோற்றால்
"சிவன் செயல்" என்பர்

### வீடு

பணபலம் காட்டிட
அமைப்பாருமுண்டு!
பணம் பொருள் காத்திட
அமைப்பாருமுண்டு!

### பதவி

பிறருக்கு உதவிகள்
செய்யவும் உதவும்!
பிறருக்கு கெடுதிகள்
செய்யவும் உதவும்!

சஞ்சீவி 23.05.98

...................................

### பொறாமை

பொறாமைத் தீயை
அறிவுநீர் தணிக்கும்!
பொறாமைத் தீயை
ஆசைநெய் வளர்க்கும்!

### போதையும் போதமும்

போதம் மிகுந்தால்
மேதைகள் ஆவார்!
போதை மிகுந்தால்
பேதைகள் அவார்!

### பணம்

என்னுடன் இருந்தாய்!
எல்லாரும் உறவு!
என்னைப் பிரிந்தாய்!
எல்லாரும் துறவு!

### தொண்டில்...?

தொண்டுகள் செய்திட
யாருமே முன்வரார்!
தொண்டினில் பிழை சொல்ல
யாருமே பின்னில்லார்!

### நீ (பீ) திகள்

நீதிகள் இருந்தால்
பீதிகள் இல்லையாம்!
பீதிகள் இருந்தால்
நீதிகள் இல்லையாம்!

சஞ்சீவி 30.05.98

**மின்சாரம் பற்றியே...!**

இன்றிங்கு பாய்கின்ற
மின்சாரம் பற்றியே
சுருக்கமாய்ச் சிலவரி
சொல்லுவேன் கேளுங்கள்!

எம்மிடம் வருவதோ
ஒன்று விட்டொருநாளே!
எம்முடன் இருப்பதோ
சில மணிநேரமே!

திடீரெனப் போய்விடும்!
படீரென வந்திடும்!!
விசாரித்துப் பார்த்தால்...
"மின்வெட்டு" என்கிறார்!!

படிக்கத் தொடங்கிட
மறைந்தே போய்விடும்!
படுக்கை விரித்திட
விரைந்தே வந்திடும்!

குப்பி விளக்கின்
துணையை விளக்கிடும்!
குப்பி விளக்கின்
உயர்வை உணர்த்திடும்!

தீப்பெட்டி யுடனோர்
குப்பி விளக்கும்
"எவரெடி" யாயுண்டு
எங்களின் கைகளில்!

அரசனை நம்பிப்
புருஷனை மறப்பதோ?
குப்பி விளக்கினை
இதற்காக மறப்பதோ?

**சஞ்சீவி 13.06.98**

---

**ஆசையை.......?**

ஆசையை அடக்கினேன்!
"அற்புதன்" என்றனர்!!
ஆசையுள் அடக்கினேன்!
"அற்பன்" என்றனர்!!

**வீதி விதிகள்!**

வீதி விதிப்படி
நடந்தால் நயங்கள்!
வீதி விதிகளைக்
கடந்தால் பயங்கள்!!

## பசி!

பசிக்கு உணவின்றித்
தவிப்போரும் உண்டு!
பசியில்லை யேயென்று
தவிப்போரும் உண்டு!

## ம(ா)னம்

மனம் தளர்ந்தால்
மானம் தாழும்!
மனம் நிமிர்ந்தால்
மானம் வாழும்!!

## மண்!

இறக்கும் வரைமண்
மனிதனின் ஆட்சியில்!
இறந்தபின் னாலவன்
மண்ணின் ஆட்சியில்!

## மருந்து

விதிமுறை தழுவினால்
நோய்களைத் தணிக்கும்!
விதிமுறை நழுவினால்
நோய்களை வளர்க்கும்!

## மரணம்

உலக் வாழ்க்கையின்
கடைசிக் காட்சி!
வெவ்வேறு விதமாக
அமையுமிக் காட்சி!!

## சக்தி

சக்தி உள்ளவரை
புலன்வழி ஓட்டம்!!
சக்தி அற்றுவிடின்
அரனடி நாட்டம்!!

## துவக்கு

நல்லவர் கைப்பட்டால்
தீயதை அழிக்கும்!
தீயவர் கைப்பட்டால்
நல்லதை அழிக்கும்!

## ஜனனம்

தாரணி வாழ்வின்
ஆரம்பக் காட்சி!
தாயின் தலைமையில்
ஆரம்பக் காட்சி!!

## இன்றைய சினிமா

இளைய மனங்களில்
நஞ்சை விதைக்குதே!
உயர்பண் பாடுகளைச்
சிதைத்து அழிக்குதே!!

## கிரிக்கெட்

மக்களின் பொழுதை
வீணடிக் கின்றதே!
மக்களின் உழைப்பைப்
பாழடிக் கின்றதே!!

**மாணவர்**

அன்னத்தைத் போலவே
விளங்கிடல் வேண்டும்!
பன்னாடை ஆடுபோல்
விளங்கிடல் வேண்டாம்!!

**சீப்பு**

தலைமுடி வார்ந்து
எழில்கூட்ட உதவும்!
"வாழைக்குலை " யெனப்
பெயர்பெற உதவும்!!

**சே(ா)ற்றில்...**

சேற்றில் மலர்வது
அழகிய கமலம்!
சோற்றில் மலர்வது
உயரிய ஜீவன்!!

**பிழையாக....**

வாழ்க்கையில் பிழைகள்
வருவதும் உண்டு!
வாழ்க்கையே பிழையாய்
அமைவதும் உண்டு!!

**மது**

பணத்தைப் பறிக்கும்!
ம(ா) னத்தைக் கெடுக்கும்!!
நலத்தைச் சிதைக்கும்!
வாழ்க்கையை முடிக்கும்!!

**தண்ட வாளம்**

இவைகள் இணைந்தால்
பயணம் இடறும்!
இவைகள் பிரிந்தால்
பயணம் தொடரும்!!

**சஞ்சீவி 25.07.98**

.....................

**இன்றைய தாய்!**

கழுத்தினில் சங்கிலி!
நெற்றியில் குங்குமம்!!
கையினில் குழந்தை!
கட்டையாய்ச் சட்டை!

**வீணை**

வீணையின் நரம்புகள்
விரல்களால் உயிர்பெறும்!
வீணையின் உயிர்ப்பினில்
உள்ளங்கள் உயிர்பெறும்!!

**சஞ்சீவி 19.09.98**

**நன்றா?**

வாழ்வினிற் பிழைகளைத்
திருத்திடல் நன்றா?
வாழ்வினைப் பிழைகள்
திருப்பிடல் நன்றா?

**கொலை**

ஆடு கோழிகளைத்
தன்னலம் வேண்டியே
ஆண்டவன் திருமுன்
அறுப்பினும் கொலையே!

**பாலில் தண்ணீர்**

தாகத்தால் பசுக்கள்
தண்ணீர் குடிப்பதால்
பாலில் தண்ணீர்
இருப்பதும் இயற்கையே!

**களிக்கட்டி**

உழுந்தும் பயறும்
செடிகளில் காய்க்கும் !
களிக்கட்டியை யுமவை
காய்ப்பதை அறிவீரோ?

**தவறணை**

தவறுகள் அனைத்தையும்
அணைக்கும் இடமிது!!
தவறுகள் அனைத்தையும்
இணைக்கும் இடமிது!!

**ம(ன)து**

மதுவைக் குடித்தால்
மனதைக் கெடுக்கும்!
மனது நினைத்தால்
மதுவைத் தடுக்கும்!

**கலங்கரை விளக்கு**

கடற் கரைகளிலே
உயர்ந்து நிற்கும் !
கலங்களைக் காத்திட
ஒளிக்கரம் நீட்டும்!!

**கப்பல்**

கடல் வழியாக
நிலங்களை இணைக்கும்!
கடல் வழியாகப்
பயணங்கள் நடத்தும்!

**வர்த்தகர்!**

தாம் சொல்லும் விலையினை
ஏற்பதை விரும்புவர்!
தாம் தரும் பொருளையே
ஏற்பதை விரும்புவர்!!

**சஞ்சீவி 26.09.98**

### விலைவாசிகள்

ஏழைகளுக் கெட்டாத
நெடுந்தொலை வாசிகள்!
நீண்ட காலமாயிவை
நெடுமலை வாசிகள்!

### நான்முகன்

பயிர்களை வளர்த்து
உணவுப் பொருள்களை
படைக்கும் உழவனே
"நான்முகன்" என்போம்!

### நாரணன்

உணவுப் பொருள்களை
உலகினுக் களித்துக்
காக்கின்ற உழவனே
"நாரணன்" என்போம்!

### காற்று

சில்லினுள் நுழைந்தால்
வண்டிகள் ஓடும்!
உடலினுட் புகுந்தால்
உயிரினம் வாழும்!!

### (ஓ/நீ) ங்குமா?

மது உண்பதனால்
மனத்துயர் ஓங்குமா?
மது உண்பதனால்
மனத்துயர் நீங்குமா?

### சம(ா) த(ா) னம்!

சமதனம் இருந்தால்
சமாதானம் இருக்கும்!
சமதனம் இழந்தால்
சமாதானம் இறக்கும்!!

### கண்ணீர்

ஆனந்த நிலையிலும்
பெருகு வதுண்டு!
ஆற்றொணாத் துயரிலும்
புரளுவது முண்டு!!

### எது நன்றோ?

ஊருடன் சிரித்து
வாழுதல் நன்றோ?
ஊரவர் சிரித்திட
வாழுதல் நன்றோ?

### காதல்

சிறுகதை யாகவும்
முடிவது உண்டு !
தொடர்கதை யாயிது
தொடர்வதும் உண்டு!!

### புகைத்தல்

புகைக்கப் புகைக்கப்
பணம் நலம் புகையும்!
புகைக்கப் புகைக்க
நோய்பிணி இணையும்!!

**சஞ்சீவி 07.11.98**

**....காணலாம்!**

உதவி செய்தாரைத்
துதிக்கவும் காணலாம்!
உதவி செய்தாரை
மிதிக்கவும் காணலாம்!!

**நா(ண/ந)யம்**

வாழ்க்கை வாழ்ந்திட
நாணயம் தேவை!
வாழ்க்கை சிறந்திட
நாநயம் தேவை!

**விஞ்ஞானிகள்**

உலகுடன் உயிர்களை
அழித்திடும் நேரத்தை
விரைவாக்க வழிவகை
அறிந்திட உழைப்பவர்!

**க(ண/ன)க்க......?**

கணக்காகப் பிள்ளைகள்
பெறுவது நல்லதா?
கனக்கப் பிள்ளைகள்
பெறுவது நல்லதா?

**.....வளம்!**

தருமம் செய்திடப்
பணவளம் வேண்டும்!
பணவளம் போதுமா?
மனவளம் வேண்டும்!!

**சஞ்சீவி 17.11.98**

.............................

**கணனி**

தொழில் செய்வோரை
விரட்டிட வந்தது!
தொழில் அற்றோரைப்
பெருக்கிட வந்தது!!

**ஒலிபெருக்கி**

ஒலியைப் பெருக்கிடக்
கண்டறிந் தனரா?
அமைதியைக் குலைத்திடக்
கண்டறிந் தனரா?

**எது நல்லது?**

உழைத்துக் களைத்து
உண்பது நல்லதா?
உழைப்புக் களைப்பின்றி
உண்பது நல்லதா?

**பொறியா?**

கல்லுடன் கல்லை
உரசிடப் பொறிவரும்!
சொல்லுடன் சொல்லை
உரசிடப் பொருள்வரும்!!

**பட்டினி**

மாடி வீட்டின்
கிட்டவும் போகாது!
ஏழை வீட்டை
விட்டும் போகாது!!

**நுகர்வோர்!**

குறைந்த விலையில்
வாங்கிட விரும்புவர்!
குறைவிலா அளவையில்
வாங்கிட விரும்புவர்!

**வாழும்**

தன்னை மறந்தால்
பொதுநலம் வாழும்!
தன்னை நினைந்தால்
பொதுநலம் சாகும்!

**மறப்பரோ?**

இலட்சிய வாழ்க்கை
வாழ்ந்தாரை மறப்பரோ?
அலட்சிய வாழ்க்கை
வாழ்ந்தாரை நினைப்பரோ?

**(அ / பா)ம்பு**

அன்பிலாச் சொற்கள்
அம்பினைப் போலாம்!
பண்பிலாச் சொற்கள்
பாம்பினைப் போலாம்!!

**(கோ/ஏ) ழை**

ஏழை என்பவருக்குத்
துணி கிடையாது!
கோழை என்பவருக்குத்
துணிவு கிடையாது!

**சஞ்சீவி 05.12.98**

**உழைப்பவன் ?**

உழைப்பவன் உழைப்பிற்
திளைப்பதும் இல்லை!
திளைப்பவன் உழைத்துக்
களைப்பதும் இல்லை!

**விற்பனையாளர்!**

வாங்கும் பொருள்களின்
அளவையில் விழிப்பு!
விற்கும் பொருள்களின்
அளவையில் சுழிப்பு!

**பட்டம்**

கற்றுத் தேர்ந்து
பெறுவதோர் பட்டம்!
காற்றிற் சுழன்று
பறப்பதோர் பட்டம்!

**சஞ்சீவி 30.01.99**

**வெள்ளம்**

வெள்ளத்திற் போய்வர
வள்ளம் வேண்டும்!
வள்ளத்திற் போய்வர
வெள்ளம் வேண்டும்!

**(உ/க)ள்ளம்!**

வெள்ளை உள்ளமா?
கள்ளம் இல்லை!
கள்ள உள்ளமா?
வெள்ளை இல்லை!!

**விலை**

விசிறியை நீக்கிட
வலையாக வீழ்ந்தது!
விசிறியைச் சேர்த்திட
விலையாக உயர்ந்தது!

**(இ/வ)சை**

ராகமும் தாளமும்
இணைந்து இசையாம் !
ஆசையும் கோபமும்
இணைந்தது வசையாம்!!

**சஞ்சீவி 23.01.99**

**இ(ரு/ர) ப்பு**

இருப்பு இருந்தால்
இரப்பும் தளரும்!
இருப்புக் குறைந்தால்
இரப்பும் வளரும்!!

**கணனி**

மனிதரின் சோம்பலை
வளர்த்திட வந்ததோ?
மனிதரின் உழைப்பைச்
சிதைத்திட வந்ததோ?

**தென்னை**

தண்ணீர் வார்த்திட
வளர்ந்தது அன்று!
"தன்நீர்" வழங்கி
வாழ்ந்துதே இன்று!!

**( வெ/ நா) ட்டு!**

மரங்களை நாட்டிடும் !
எண்ணமே இல்லையேல்
மரங்களை வெட்டிடும்
உரிமையும் இல்லையே!

**மக்களே**

மரங்களை வெட்டிடக்
காட்டிடும் வேகத்தை
மரங்களை நாட்டவும்
காட்டுவோம் மக்களே !

**தேவை 01**

கங்கைக்குத் தேவை
வளமும் பெருக்கும்!
மங்கைக்குத் தேவை
கனிவும் பணிவும்!

**தேவை 02**

அறிஞர்க்குத் தேவை
தெளிவும் பணிவும்!
வறிஞர்க்குத் தேவை
சகிப்பும் உழைப்பும்!!

**தேவை 03**

இளைஞர்க்குத் தேவை
வேகமும் விவேகமும்!
கிளைஞர்க்குத் தேவை
நெருக்கமும் உருக்கமும்!

**தேவை 04**

வீட்டுக்குத் தேவை
யன்னலும் கதவும்!
நாட்டுக்குத் தேவை
நீதியும் அமைதியும்!

**புத்தகம் !**

புதிய வீட்டையும்
புத்தகம் என்கிறார்!
படிக்கும் நூலையும்
புத்தகம் என்கிறார்!

**சக்தி**

குற்று இருந்தால்
சக்தி என்பார்கன் !
குற்று இழந்தால்
சகதி என்பார்பகன்!!

**சஞ்சீவி 19.12.98**

**குப்பிவிளக்கு**

குடிசையுள் எரிந்தால்
ஒளிதருவாய் நீ!
குடிசையுள் சரிந்தால்
எரியூட்டுவாய் நீ!!

**(பி/ப) ணம்**

விசிறியை இழந்தால்
பிணம் பணமானதோ?
விசிறியை இணைத்தால்
பணம் பிணமானதோ?

**அ(டி/ணை)ப்பதா?**

மனைவியைக் கணவன்
கைநீட்டி அடிப்பதா?
மனைவியைக் கணவன்
கைநீட்டி அணைப்பதா?

**உறவு**

பணம் பெருகிட
உறவும் பெருகும்!
பணம் சுருங்கிட
உறவும் சுருங்கும்!!

**சஞ்சீவி 12.12.98**

### சோடி
அரவுடன் இருந்தது!
சோடியா யிருந்தது!
அரவினை இழந்தது!
சேடியா யிணைந்தது!

### ப(ா)ணி
பாணி இனித்திடும்
அரவுடன் இருந்தால்!
பணி இனிக்குமா
அரவினை இழந்தால்

### மோதி
அரவுடன் இணைந்தால்
மோதி நின்றிடுமா?
அரவினை இழந்தால்
மேதி நின்றிடுமா?
**சஞ்சீவி 27.03.99**

......

### அனுபவித்தறியவாம்!
குளிர்காலத்திலும்
குளிரூட்டிய அறையில்
பணம் படைத்தவன்
படுத்துறங்கிறான்!
ஏனெனில் -
ஏழை குளிரினால்
எப்படி வருந்துவான்
என்பதைத் தானே
அனுபவித்தறியவாம்!

### வி/மெஞ்ஞானம்
விஞ்ஞான விளக்கு
மனையிருள் ஓட்டும்!
மெஞ்ஞான விளக்கு
மனத்திருள் ஓட்டும்!

### கணிதம்
கணிதம் என்பது
கணக்கிடும் பண்பு!
மனிதம் என்பது
மனத்தெழும் பண்பு!

**சஞ்சீவி 03.04.99**

### மதகு
மழை வெள்ளம்
பாய்ந்தோடும்
உனதூடே!
மறைவிடம்
சிலருக்கு உன்கீழே!
விளம்பரங்கள்
ஓட்டுகிறார்
உன்மேலே!
பயணம் செய்கிறார்
உன் வழியே!
அமர்ந்திருந்து
அரட்டை அடித்துப்
பொழுதைக் கழிக்கிறார்
உன் மீது!



# தமிழ்த்தாயே!
## தலைதாழ்த்திப் பணிவேனம்மா!!



**ராகம் : அமிர்தவர்ஷினி** **தாளம் : ஆதி**

பல்லவி

தமிழ்த்தாயே அருள்வா யம்மா - என்தன்
தலைதாழ்த்திப் பணிவே னம்மா - என்றும்
(தமிழ்த்...........)

அனுபல்லவி

பிறைசூடி திருவாயில் மலர்ந்தவளே - புவி
நிறைவாக்கத் தென்பொதிகை நடந்தவளே - அம்மா
(தமிழ்த்............)

சரணம்

இயலோடு இசைகூத்தாய்த் திகழ்பவளே - வில்
கயலோடும் புலியோடும் ஒளிர்பவளே - கலை
எண்ணெட்டும் அணிசெய்யத் திகழ்பவளே - நெடு
விண்முட்டப் புகழ்ந்தேத்த வளர்பவளே - அம்மா
(தமிழ்த்............)

புவிவாழும் உனதன்பர் பணிந்திடவே - கோடி
உயிராளும் கவிமன்னர் புகழ்ந்திடவே - மெய்
அறிவாளும் அறவோர்கள் ஏத்திடவே - விண்
அகமாளும் துறவோர்கள் போற்றிடவே - அம்மா
(தமிழ்த்...........)

கற்றோர்க்குக் குறையாத அமுதளிப்பாய் - உனைப்
பெற்றோர்க்கும் வரையாது சுமுகமளிப்பாய் - அணி
செய்தோர்க்கு எந்நாளும் உயர்வளிப்பாய் - பணி
செய்தோர்க்கும் பொன்றாத நிலையளிப்பாய் - அம்மா
(தமிழ்த்...........)

உதயன் 16.06.91

## இவரைப்பற்றி ...............!



புகழ்பூத்த சைவப்பேரறிவாளர்களும் இசைவாணர்களும் கவிதையாளர்களும் பெரும்புகழ் சேர்க்கும் கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்தான் **சரவணமுத்து முருகையா**. அரசு எழுதுநர் சேவையில் இருக்கும் போதே கவிதை, சிறுகதை, பக்திப் பாடல்களை எழுதி வருமிவர் இன்று "மனிதர்கள்" என்னும் கவிதைத் தொகுதியை எமக்குத் தந்துள்ளார்.

ஈழத்து நாளேடுகள் சஞ்சிகைகளிலும் தமிழகத்திலிருந்து பிரசுரமான "தீபம்" மாதாந்த சஞ்சிகையிலும் கடந்த முப்பதாண்டுகளாக முத்தான சத்தான - பலகவிதைகளை "முருகு" என்னும். புனைபெயரில் படைத்தளித்து வருகின்ற இவர், "பக்திப்பாமாலை" (1987), "ஊருக்கல்ல" (சிறுகதைகள் 1991), "ஐங்கரன் பாமாலை" (1993) "நல்லைக் கந்தன் பாமாலை" (1995) "நாமகள் பாமாலை" (1998) ஆகிய நூல்களைப் பிரசுரித்துத் தமிழுக்கு அணி செய்துள்ளார்.

தமிழ் என்னும் சொல்லும் இனிமை, பொருளும் இனிமை, பெயரும் இனிமை. "முருகு" என்னும் சொல்லுக்கு அழகு, இளமை என்பவை சிலபொருள். எனவே இவரது கவிதைகளில் கருத்தாழம் கற்பனைவளம், அழகு, இனிமை, இளமை, எளிமை, உணர்ச்சி நிறைந்துள்ளமை வியப்பல்லவே! அமைதி, அடக்கம், பணபுநலன் வாயக்கப் பெற்ற இக்கவிஞர் பழக இனியவர், பண்பாளர்.

ஈழத்தமிழ்க் கவிதையுலகில் இவருக்குரிய நல்லதொரு இடத்தை "மனிதர்கள்" பெற்றுக் கொடுப்பார்கள் என்றால் அது மிகையல்ல! இவரது தமிழ்ப்பணி வாழ வளரத் தமிழன்னை அருள்வாளாக.

"புத்தொளி" ந.சிவபாதம்
கௌரவ பொருளாளர் யாழ் இலக்கிய வட்டம்.


**பிள்ளையார் அச்சகம், நல்லூர் யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கம்:-0777 - 271479**